சிவாஜி

பெருந்துறை ஊழியர்

பெருந்துறை க்ஷயரோக ஆஸ்பத்திரியைப்பற்றி அனைவரும் கேள்விப் பட்டிருப்பார்கள். சுவாசநோய் நிவாரணத்திற்கு ஏற்ற சுகாதார நிலையங்களில் தமிழ்நாட்டின் முதன்மையானவற்றில் ஒன்றான இதன் கௌரவ காரியதரிசியாக இருக்கும் ஆர். கே. வி. அவர்களே மேலே புகைப்படத்தில் காட்சியளிக்கிறார். அவர்களைப்பற்றி ஆங்கில வாரப்பத்திரிகையான ப்ரீ இந்தியாவில் 'வசந்தம்' ஆசிரியர் ஆர். திருஞானசம்பந்தம் அவர்கள் எழுதியுள்ள அழகான கட்டுரையின் தமிழ் பெயர்ப்புதான் அருகில் பிரசுரமாகியுள்ளது.

—ஆசிரியர்.

பெருந்துறை சானடோரியம்

ஆர். கே. வெங்கடசாமியின் சேவை

தடாகத்திலே புஷ்பங்கள் பூத்திருக்கின்றன. அல்லியும், குவளையும் அழகலைகளை அள்ளிவீசுகின்றன. செங்கழு நீர்ப்பூவும், கொடிப்பூவும் இளநகை புரிகின்றன. இருந்தாலும் தாமரை மலர் தருகின்ற தனிச் சோபையை வர்ணிக்க இயலுமா? தாமரைக் கன்னியின் தனிக்கொலு வார்த்தை அடங்கா அற்புதம் அல்லவா? அதுபோல் வாழ்விலும் மனித குணத்தில் பலவிதக்கோணங்களைக் காண்கிறோம். சிலருடைய இங்கிதம் நம் நெஞ்சைத்தொட்டு தீண்டி விடுகிறது. மல்லிகை மணம்போல் என்றென்றும்—நினைக்குந்தோறும் தேன் நினைவாக அது தெவிட்டாத இன்பந்தருகிறது. இவ்விதம் இனிமை நிறைந்த அதிசய மனிதர் ஆர். கே. வெங்கடசாமி. தமிழ்ப் பெரியார் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களை நாடு அறியும். டி. கே. சி. அவர்களுடைய கலா ரசனையையும், பண்பின் திறனையும் நீக்கிவிட்டு, மனிதர் என்றமுறையில் பார்த்தால்—அவருடைய உள்ளத்தில் எத்தகைய வாஞ்சையும், பிறரிடம் பிரியமும் நிறைந்துள்ளதோ அத்தகைய பரிவும் பக்குவமும் பூண்டவர் ஆர். கே. வெங்கடசாமி.

கோயமுத்தூர் ஜில்லா அரசியல் வட்டாரத்திலே குறிப்பிடத்தக்க தலைவர் ஆர். கே. வெங்கடசாமி. பத்துப் பதினைந்து வருஷங்களாக காங்கிரஸிலே தீவிரமாகப் பங்குகொண்டு பணியாற்றி வருகிறார். அவருடைய சொந்த ஊரான ஈரோட்டிலே 38-லிருந்து 47-வரை ஒரு ஒன்பது வருஷம் முனிசிபல் சேர்மனாக இருந்து திறம்பட முனிசிபாலிடியை நடத்தி இருக்கிறார். தமிழ்நாட்டிலே அதி அற்புதமான இயற்கை எழில் படைத்த பார்க் ஈரோடு பார்க். அங்கேயுள்ள அழகிய காந்திசிலை இந்த நண்பருடைய முயற்சியால்தான் பார்க்கிற்கு சோபை தருகிறது. இவர்காலத்தில் அங்கு ஸ்தாபிக்கப்பெற்றது அந்த காந்தி சிலை.

ஆர். கே வெங்கடசாமி அவர்கள் அடக்கமாக மனித குலத்திற்குப் புரிந்து வரும் ஒரு அரிய செயலை எடுத்துச் சொல்லவே இக்கட்டுரையை இங்கு எழுத நேர்ந்தது. கோயமுத்தூர் ஜில்லாவிலே உள்ள பெருந்துறை என்னும் சிற்றூரையும், அங்கே நடைபெற்றுவரும் பெருந்துறை க்ஷயரோக ஆஸ்பத்திரியையும் பற்றிக்கேட்டிருப்பீர்கள்.

நவீன விஞ்ஞானத்தின் விளைவாக புதிய புதிய மருந்துகள் கண்டு பிடிக்கப் பட்டு வருகிறமாதிரி புதிய புதிய வியாதிகளும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. கொடிய நோய்களில் ஒன்றான க்ஷயரோகத்தைத் தடுக்காவிட்டால் வருங்கால சந்ததிகள் சுகமாக இருப்பது எப்படி? நல்ல வாழ்வுக்கு மக்களை நடத்திச் செல்லவேண்டும், வாழ்விலே நிம்மதியும் ஆனந்தமும் ஏற்படச்செய்வது ஒன்றே நமது லட்சியம் என்று தேசத்தலைவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள். தேசத் தலைவர்களின் வாக்கைக் காப்பாற்ற தக்க அரண் ஏற்படுத்தவேண்டும் அல்லவா? அப்படிப்பட்ட வியாதித் தடுப்பு அரண்களில் ஒன்றுதான் பெருந்துறை 'சானடோரியம்'. க்ஷயரோகத்தை குணப்படுத்த அங்கே அந்த இடமே சாந்தமும், அமைதியும், இயற்கைச் சூழ்நிலையும் நிறைந்ததாக அமைந்திருக்கிறது. ஆரவாரமற்ற அந்தப் பிரதேசத்தில் ஆஸ்பத்திரிக்கட்டிடமும், படுக்கைகள், ஆபரேஷன் தியேட்டர்கள், விடுதிகள், பால் பண்ணை முதலியன சீராக அமைந்திருக்கின்றன. பெருந்துறை 'சானடோரியம்' சில உண்மையான சேவா உணர்ச்சியுள்ளவர்களால் ஆரம்பிக்கப்பெற்று, பொதுமக்கள் ஆதரவுபெற்றே வளர்ச்சி அடைந்து வருகிறது. சர்க்காரும் கொஞ்சம் 'கிராண்டு' தருகிறார்கள். சானடோரியத்தின் வளர்ச்சியைப்பற்றிப் பேசுகையில், அதற்காக பாடுபட்ட டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், டாக்டர் வாசுதேவன் முதலியவர் கண் எதிரே காட்சி அளிக்கிறார்கள். தற்போது திறம்பட கவனிக்கும் டாக்டர் வில்வநாதன் இதர சகாக்கள் எல்லோரும் போற்றுதற்கு உரியவர்களே இருப்பினும் ஆர். கே. வெங்கடசாமி அவர்கள் செய்து வருகிறதொண்டு என்னைப்பெரிதும் கவரக் காரணங்கள் இரண்டு. ஆர். கே. வெங்கடசாமியின் அருமை மனைவி அக்கொடிய நோய்க்கு இரையானார்கள். அது காரணமாக கடமை யுணர்ச்சியும் கலந்து அவர் மனதில் வேதனையோடுகூடவே சேவா மனப்பான்மையையும் நிறைத்து விட்டிருக்கிறது. ஆர். கே. வி. அதனாலே 'பிச்சை' எடுப்பதில்—சானடோரியத்திற்காகத்தான்—பொதுமக்களிடம் 'பிச்சை' எடுப்பதில் அலுப்புச் சலிப்புக்கொள்வதே கிடையாது!

'சானடோரியத்'தின் வளர்ச்சி ஒன்றே அவருடைய குறிக்கோள். அதற்காக எந்தெந்த வகையில் வசூல் செய்யவேண்டுமோ—அத்தனை விதங்களையும் திறம்பட கையாண்டு சானடோரியத்தைப் பலப்படுத்திவருகிறார்.

நமது மக்களுக்கு இன்னும் ஞானம வந்ததாக இல்லை. நமது பணம் படைத்த கனவான்களுக்கு இன்னும் பண்பு பிறந்ததாகத் தெரியவில்லை. சமூகத்

(5-ம் பக்கம் பார்க்க)

6-3-49 (சிறுவர் மலருடன்) விலை அணா 2

ரேகை சாஸ்திரம்

இருதய ரேகை

" சிவநாஸன் "

இருதய ரேகையின் பொது அமைப்பைப் பற்றி கவனித்தோம். மனிதர்களின் வாழ்க்கை பல விதமாக காணப்படுவதால், ரேகைகளும் பல விதமாக காணப்படுகிறது. சில முக்கிய குறைபாடுகளைப்பற்றி ஆராய்வோம்.

இருதய ரேகை புத்திரேகையின் நடு பாதியில் உற்பத்தியாகி குரு மேட்டைச் சேருமானால், இருதய ரேகை உற்பத்திக்காலம் வரை வாழ்க்கை மனம்போன போக்காக இருக்கும். இருதய ரேகை புத்தி ரேகையை குறுக்கிட்டு செல்லுவதும் சிலரிடம் காணலாம். இப்படியாக குறுக்கிடும் காலத்தில் கடும் நோயை தரும். சனி ஆதிக்கருக்கு நரம்பு சம்பந்தமான நோயையும் சூரிய ஆதிக்கருக்கு பார்வை குறைவையும் கொடுக்கும். புத ஆதிக்கருக்கு பித்த நோய்கள் வருவதுண்டு. செவ்வாய் ஆதிக்கருக்கு ரத்தக்கொதிப்பு (*Blood Pressure*) வருவதுண்டு. இருதய ரேகை சங்கிலி போல் காணப்படுவது மூளையின் மின்சாரசக்தி தடங்கலுடன் செல்லுகிறது என்பதைக் காட்டுகிறது. பலவீனமான இருதயத்தையும் ரத்தக் குறைவையும் காட்டுகிறது. தவிரவும் இவர்கள் நிரந்தரமாக பிறரிடம் அன்புவைப்பதில்லை. இருதய ரேகை அர்த்த மற்ற ரேகைகள் குறுக்கிடுமானால் நோயை குறிக்கிறது. இருதய ரேகையில் தீவு காணப்படுவதும் கெடுதல். இருதய நோய் வந்து, பார்வையும் குறையும். இருதயரேகை துண்டு பட்டிருந்தாலும், அந்தக்காலத்தில் கடும் நோய் அல்லது மற்ற ரேகைகள் நன்கு அமையாவிடில் மரணத்தையும் காட்டுகிறது. எல்லாவற்றையும் விட மிகவும் கெடுதலானது நட்சத்திரக்குறி காணப்படுவது. இதுவும் அகால மரணத்தை, இருதயத்தில் காயமுண்டாகி வரும் என்பதைக் காட்டுகிறது. இருதய ரேகையின் கிளை விதிரேகையை குறுக்கிடும் வயது ஒருவரின் வாழ்கையில் முக்கியமான வருடம். இந்த வயதில் அவர் தம் மனைவியை இழப்பார் என்பதைக் காட்டுகிறது. இருதய ரேகை மட்டும மிகவும் மெல்லியதாகக் காணப்பட்டால் மிகவும் கெட்ட எண்ணம் கொண்டவர். பிறருக்கு தீங்கு செய்வதை சாரணமாக எண்ணுவார்கள். தவிரவும் கொஞ்சமும் வளையாமல் புதன் மேட்டிலிருந்து நேர்கோடாக குருமேடுவரைசென்று கிளைகளும் இல்லாமல் இருந்தால் இதுவும் மேலே சொன்ன மனப்பான்மையை நிச்சயப்படுத்துகிறது. முன் யோசனை என்பது இவர்களிடம் கிடையாது. நல்ல ஸ்திதியில் இருந்தாலும் இத்தகையவர்கள், சாமர்த்தியமாக பிறருக்கு தீங்கிழைப்பார்கள்.

இருதய ரேகையின் குறைபாடுகள் பல ரேகையின் அமைப்பைத்தாங்கி நிற்கிறது. பலன்களை ஒத்திட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும். அவசரப்பட்டு கடுமையான பலன்கள் எதையும் கூறுவது கூடாது.

ரேகைகளில் காணப்படும் குறைபாடுகளைப்பற்றி விவரிக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு எழுத பிரியப்படவில்லை. ஆனால் வரும் முன் காற்போம் என்பதற்காகத்தான்.

ஒருவரின் கையைப் பார்த்து பலன் சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில் அவர் என்னைப் பார்த்து சொன்னதாவது, "விதி வழியேதான் எல்லாம் நடக்கும் என்று கூறப்படுகிறதே, ஆனாலும் வரப் போகும் நோயையும் எதிர்பாராத சம்பவத்தையும் எப்படி தடுக்கமுடியும்" என்று. விதி வழியே எலலாம் நடக்கும் எனபது உண்மையே. ஆனாலும் ஒருவர் தன்னுடைய கெட்ட குணங்களை விட்டு உயர்ந்த குணங்களை ஆதரிப்பார்களானால் தன்னுடைய வாழ்க்கையையே திருத்தி அமைத்து விடுகிறார்கள். இன்று விதைக்கப்படும் வியாதிக்குரிய விதை பல ஆண்டு சென்று கடும் நோயாக மாறுகிறது. இன்று எச்சரிக்கையுடன் இருந்தால் அந்த நோயை அணுகவிடாமல் செய்துவிடலாம். மனதில் தோன்றும் எண்ணங்களே ரேகையாக பிரகாசிக்கின்றன.

இதில் சில மகான்களின் மொழிகளை அவர்கள் சொல்லில் ஆங்கிலத்தில் எழுதப் பிரியப்படுகிறேன். *Dr. M. H. Syed,* M.A., P.H.D, *D. Lit., writes in "Hindu Mind", "It is always open to him to mould his Karma which is in the course of making in any way he likes". S Radhakrishnan in, "An Idealist view of hife", says, "He can actively mould his future instead of passively suffering the past".* ஆகையால் ரேகை சாஸ்திரத்தைப் படிப்பது முதலில் தங்களுடைய கைகளை பரீட்சை செய்துகொள்வதற்காக தன்னுடையவாழ்வின் பின் கால மர்மங்களை அறிந்து கொள்வதற்காக.

ஆயுள், புத்தி, இருதயம் ஆகிய மூன்று ரேகைகளும் மனிதனின் வாழ்வு, ஆயுள்காலம், மன அமைப்பு, எண்ணங்கள் இவைகளை கண்ணாடி போல் காட்டுகிறது.

அடுத்தபடியாக வேண்டியது விதி ரேகை. இதை தொடர்ந்து கவனிப்போம்.

அனுபவ ஞானி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

படங்களைப் பார்க்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டதுண்டு. நமது நாட்டில் பல கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் ஆசிரியர் வந்து இவற்றைப் பார்த்துப் பயனடைந்திருக்கிறார்கள். அடைந்து வருகிறார்கள். ஏட்டுப் படிப்பைவிட, கண்ணால் நேரே கண்டு, அவற்றைப் பயிலுவதன் மூலம் நமது மாணவர்கள், செலவிடும் ஆண்டுகளையும் செல்வத்தையும் சிக்கனமாக்கிவிட முடியுமென்பது நாயுடு அவர்களின் கருத்து.

நாயுடு அவர்கள் தன் முயற்சியால் உருவாக்கியிருக்கும் தொழிற்சாலையிலும் கல்லூரிகளிலும் குறைந்தகாலத்தில் மிகுந்த கல்வியறிவைப் பெற்றுப் பயனடைந்திருக்கும் மாணவர்கள் எத்தனையோ பேர் கல்லூரிகளில் யந்திர சாஸ்திரங்கள் படிக்கும் மாணவர் சிலர், கோடை விடுமுறைகளில் நாயுடு அவர்களின் தொழிற்சாலையில் பிரத்யக்ஷப் பயிற்சிஞானம் பெற்றுத் திரும்புவதுண்டு. ஆண்டாண்டுகளாக அவர்கள் கல்லூரியில் செலவிட்ட நேரத்தில் பெற்ற பயனைவிட ஓரிரு மாதங்கள் நாயுடு அவர்களின் கீழ் பயின்று பெற்றுக்கொண்ட கல்வி, தொழில் அறிவு பல மடங்கு அதிகமாகுமென்று நிரூபணமாகியிருக்கிறது.

தேசீய உணர்ச்சியில்லையானல் நாயுடு அவர்கள் தன்னுடைய திறனை அரும்பாடு பட்டு இப்படிப் பலருக்கும் பயன்படுத்த நேர்ந்திருக்காது. நமது நாட்டில் காலத்தின் அருமை அமெரிக்காவைவிட நூறு மடங்கு குறைத்து உணரப்படுகிறதென்று அவர் கருதுகிறார்.



மகாத்மா காந்தியடிகளின் ஞாபகார்த்த நிதிக்குப் பணம் திரட்டும் நோக்கத்துடன் ராஜன் பாபு தெற்கே வரவிருக்கிறார்.

'வரி பூத' பட்ஜெட்

(முன் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்கத் தக்கதாக இல்லை என்று வருத்தத்துடன் கூற வேண்டியிருக்கிறது. இந்த பட்ஜெட்டில் சரியான திருத்தங்கள் செய்து, வரிகளை வாபஸ் வாங்கினாலல்லாது பொது மக்களுக்குப் பெருந் துயரமே விளையும்.

ஒரு நாட்டின் பொருளாதார நிர்வாகத்தில் 'வரி விதிப்பு' முககியமான அம்சமாகும். ஏற்றத் தாழ்வற்ற முற்போக்கான சமூக அமைப்பில் வரிகளுக்குத் தேவையே பெரும்பாலும் ஏற்படாதென்பதுடன், வரிகளால் ஏற்படும் லாபமும், நலனும் கணிசமாகவும் இருக்கும். சிரமமும் மக்களிடையே சமதையாக விநியோகிக்கப்படும்.

ஆனல் பத்தில் ஒன்பது பங்கு மக்கள் உற்பத்திசெய்யும் பணம் பத்தில் ஒருபங்கு மக்களின் பைக்குள் ஒடுங்கிப் போகும் சமூக அமைப்பில் அரசாங்கத்தின் பொறுப்பு மிகவும் பெரிய பொறுப்பு. ஒடுங்கின பணத்தைத் தன் வசம் கவர்ந்து அதன் பலனை மக்களிடையே சரியாக வினியோகிக்கும் பெறும் பொறுப்பே இது.

நமது அரசாங்கங்களின் பொருளாதாரக் கொள்கைகள் இந்தக் கடமைக்கு நேர்விரோத

(6-ம் பக்கம் பார்க்க)

கரூர் டி. மு. கோர்ட்
IA 98/49 O. S. 70/49

நாச்சியப்பக் கவுண்டன் தனக்காகவும், மற்ற இதர கிரெடிடர்களுக்காகவும். — வாதி

காளியப்ப கவுண்டன் வகையறா- — பிரதிவாதிகள்

ஷை மெம்பர் வாதி தனக்காகவும் 3-ம் பிரதிவாதி தகப்பன், வீரப்பகவுண்டனுடைய இதர கிரெடிடர்களுக்காகவும் கரூர் டி. மு. கோர்ட்டு O. S. 694/28 E. P. 122/46 E. A. 245/46 நெம்பரில் 7—2—48 தேதியில் ஏற்பட்ட ஆர்டரை ரத்து செய்ய வேணுமாயும், இன்னம் சில பரிகாரங்களுக்காகவும் தாவா செய்து இந்ததாவா 21—3—49 தேதி வாய்தா ஏற்பட்டிருக்கிறது.

G. Srinivasa Iyengar.
Pleader.
2—3—49

பட்டு, நூல் சேலைகள், ஜங்கிளா, பனாரஸ் பட்டு புடவைகள் மிகவும் நூதன பார்டர்களில் கிடைக்குமிடம் :

கல்யாணகாலம்! கைராசி!! நாணயம்!!!

M. N. நாகேந்திரம் சன்ஸ்,

மலைவாசல், தெப்பகுளம் P. O. திருச்சி.

சிவாஜியின் சுலபமான வெற்றிகளும், ஊக்கமும், ராஜதந்திரமும் சூழ்புறத்திருந்த மக்களைக் கவர ஆரம்பித்தன. கவனிக்கத்தக்க யாரோ ஒருவன் பாராட்டத்தக்க வீரச் செயல்களில் ஈடுபட்டுத் தம் உணர்ச்சிகளைத் தட்டி யெழுப்புவதை அவர்கள் உணர்ந்தார்கள்.

வாலிப முறுக்குமிருந்த பல மராத்திய வீரர்கள் தமது வழக்கமான விவசாய வேலைகளையும், மலை நாட்டுத் தொழில்களையும், விடுத்து வாளேந்திக் குதிரையேறும் போர்த் தொழிலுக்குப் புகுந்தார்கள். இதையும் விட அதிசய மென்னவெனில், மறை பயின்று மனவெளியில் உலவி வந்த மறைக்குலத்தோர் பலர் மலைவெளியில் மாண்புடன் குதிரையேறியுலவும் சிவாஜியின் வீர வடிவுக்குக் காதலராகி அவனது படையில் சேர்ந்தனர். இவ்வாறு சிவாஜியின் செல்வாக்கும், படை பலமும் சிறுகச் சிறுகப் பெருகி வந்தன.

ஃ ஃ ஃ

மொகலாய சாம்ராஜ்யத்துக்கும், பீஜபுரி அரசுக்கும் எல்லையில் இருந்த கோட்டைத் தொடரைத் தன் வசமாக்கிக் கொண்டு விட்ட சிவாஜி அடுத்த ஆட்டத்தைப்பற்றிச் சிந்தனை செய்தான்.

கடற்கரையோரமாகப் பசுமையோடு அகண்டிருந்த கல்யாண் பிராந்தியம் அவனைக் கவர்ந்தது. அந்தக்காலத்து மத்திய, மேற்கு இந்திய இயற்கையமைப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கல்யாண் மாகாணம் பொன் கொழிக்கும் புனித பூமியாகத்தான் தோன்றியிருக்க வேண்டும்.

அந்த மாகாணமும் பீஜபுரியைச் சேர்ந்ததுதான். 'சிவாஜி' அந்தப் பிராந்தியத்தில் பன்முறை உலவியிருக்கிறான். ஆயிரம் காலமாக வேரோடி அகண்டு நின்ற ஆல நெடுமரங்கள் ஓரங்களில் அணிவகுத்து நிற்க, அரைத் தூக்கத்தில் அயர்ந்திருக்கும் மலைப்பாம்புபோல் நீண்டிருந்த அதன் ராஜபாட்டையில் பல நாள் சென்றிருக்கிறான்.

பதினான்காம் அத்தியாயம்

கல்யாண் வெற்றி

பசுங்கிளிகள் கொஞ்சியுட்கார்ந்து கலகலப்பூட்டும அந்த மரங்களின் அன்பால் இடைவெளியின்றி முழுதும் நீண்டிருந்த அந்த இனிய நிழல் பாதை வழியே தினந்தோறும் தூரத்து ஆப்பிரிக்காவினின்றும், அரேபியாவினின்றும் விலையுயர்ந்த 'சரக்குகள்' சுமந்து செல்லும் வியாபாரிகளின் செல்வச் செருக்கு நிறைந்த பரிவாரங்கள் படர்ந்து செல்வதையும் அவன் பார்த்திருக்கிறான்.

அந்த மாகாணத்தின் தலைநகரம் கல்யாண் என்னும் பட்டணம். சூழ்ந்து நின்ற பிராந்தியத்தின் பசுமையுடன் இந்நகரம் ஒன்றி நின்றதாகத் தோன்றவில்லை. நடுப்பகலின் சூன்யமே அதில் நிறைந்திருந்தது. மலர் மண்டிக்கிடந்த தோட்டங்களையும், மரங்களடர்ந்த தோப்புகளையும், மாளிகைகளையும் தவிர அந்நகரம் வேறு சிறப்பேதும் படைத்திருக்கவில்லை. எனினும் அது ஒரு முக்கிய வியாபார ஸ்தலமாக இருந்ததென்பதை மறுக்க முடியாது.

ஃ ஃ ஃ

கல்யாணைத் தலைநகராகக் கொண்ட அம்மாகாணத்தில் பீஜபுரி அரசவையின் கௌரவம் மிகுந்த கவர்னராக அமர்ந்திருந்தவன் முலானு அகம்மது என்பான். ஆண்டுக்கொருமுறை பீஜபுரிக்கு அனுப்பவேண்டிய வருமானத் தொகையை அனுப்புவதும், அயர்ந்து சோம்பிக் கிடந்த தன் ராணுவத்தை மேற்பார்வை பார்ப்பதும், மற்ற வேளைகளில் குஷாலாகப் பொழுது போக்குவதும் தான் அவனது மாமூல்.

அந்த ஆண்டுக்கான வருமானத் தொகை நிரம்பிய கனத்த பெட்டியை பலமான முத்திரையிட்டு, நல்ல காவலுடன் அப்போது தான் பீஜபுரி நோக்கி அனுப்பி விட்டிருந்த அந்த முலானு அகம்மது, கடுமையான வேலையின் பிறகு ஓய்வை நாடும் உழைப்பாளிபோல், தன்வசம் மீறிய அயர்வில் ஆழ்ந்திருந்தான்.

பொக்கிஷம் நகர்ந்தது. போர்வீரர் பாதுகாத்துச் சென்றனர். நிழல் மண்டிய அந்த நெடிய ரஸ்தா நேராக பீஜபுரிக்கு அழைத்துச் செல்வது. புட்களின் பகற் குரலில் ஒலி நிரம்பியிருந்த அந்த ரஸ்தா ஒரு நீண்ட கணவாய் வழியே புகுந்து பீடபூமியை அடைவது. கணவாய் மிக நெருக்கமானதென்பதுடன், நடுப்பகலிலும் இருள் மண்டியிருக்கும். சூழ் புறமெல்லாம் ஒரே காடுகளும், புதர்களுமாயிருக்கும். வழக்கத்தினால் சகஜமாகி விட்டதன் காரணமாகவே இவ்வாறு பொக்கிஷங்கள் நகர்வது சாதாரணமாக, ஆபத்திற்கிடமாகாத செயலாக ஆகியிருந்ததே ஒழிய, உண்மையில் அது அஞ்சத்தக்க சூழ்நிலையே.

பூரண நம்பிக்கையுடன் உல்லாஸமாக கணவாயில் நுழைந்தது பொக்கிஷத்துடன் சென்ற சிறு கூட்டம். கணவாயில் பாதி கடக்கப்பட்டிருக்கும். தடதட வென்று குதிரைகள் பாய்ந்து வரும் குளம்பொலிச் சீற்றம் கேட்டது. இந்த அதிர்ச்சியை செவியினின்று தடுக்குமாறு "ஹர ஹர மஹாதேவ" என்ற பேரிரைச்சல் மோதிற்று. கணவாய் முழுவதும் இந்த இரைச்சலின் குழப்பத்தை பயங்கரமாக எதிரொலித்தது.

சிறிது நேரம் வாட்கள் மோதும் ஒலியும், குதிரைகள் மோதிக்கொள்ளும் கனத்த ஓசையும், சிறு சலசலப்பும் கேட்டது. வெகு விரைவில் அது அடங்கிப் போய்விட்டது.

கணவாய் இருளினின்று அந்தப் பொக்கிஷத் தூதுகோஷ்டியினர் வெளிப்பட்ட போது சுமார் முன்னூறு மராத்திய வீரர் சூழ்ந்து நிற்பதையும், அந்த வீரர் தலைமையில் சிவாஜி புன் சிரிப்புடன் காட்சியளிப்பதையும் கண்டார்கள்.

பொக்கிஷம் சிவாஜியின் கைவசமாயிற்று. தன் வீரரைப் பார்த்தான். பதின்மர் அந்தச் சிறு கலகலப்பில் உயிரிழந்திருந்ததைக் கண்டான். பொக்கிஷத்துடன் தன் வீரர் தலைமையில் இருப்பிடம் சேர்ந்தான்.

இந்தக் கணவாய்த் தாக்குதல் நடந்த அதே தினத்தில் நடுப் பகலின் நிசப்தமான அரவணைப்பில் ஒரு மராத்தியக் குதிரைப்படை சிறு ஆர்ப்பாட்டம் கூடச் செய்யாமல் கல்யாண் நகரத்து அரண்மனை வாயிலை அடைந்து, காவலரை சுலபமாகக் கட்டிப்போட்டு விட்டு, உள்ளே நுழைந்து கவர்னர் முலானு அகம்மதைக் கைது செய்துவிட்டது.

அன்று மாலையிலேயே சிவாஜியின் திட்டப்படி ஒரு மராத்திய வாலிபன் அந்த கவர்னர் பீடத்தில் அமர்த்தப்பட்டான்.

கவர்னர் முலானு அகம்மது அரண்மனையிலேயே கைதியாக வைக்கப்பட்டிருந்ததுடன் அவனது அழகிய மருமகளும் அவனுடனிருந்தாள்.

சில நாட்களுக்குப் பிறகு சிவாஜி கல்யாணுக்கு வந்தபோது தன் திட்டம் பூரணமாக நிறைவேறியிருப்பதைக் கண்டு மகிழ்ந்தான். அகம்மதுடன் அரண்மனையிலேயே இருந்த அழகியைப் பார்த்தபோது சிவாஜிக்கு ஏற்பட்ட அதிசயம் உண்மையில் மகத்தானதாகத்தான் இருந்தது. மலர்ந்த கண்களுடன் அவளது வதனத்தைப் பார்த்துக்கொண்டே அக்கரை காட்டாத தொனியில் அவன் கூறிய சொற்கள் ரஸனைக்குரியவை.

"என் தாயார் மாத்திரம் உன்னில் பாதி அழகியாயிருந்திருந்தால் நான் இத்தகைய குரூபியாக இருக்க மாட்டேன்" என்றான் வாலிப அழகுக்கே உதாரணமாய் நின்ற அவ் வீரன் சிவாஜி! தன் அன்பின் அடையாளமாக அவளுக்கு நிறையப் பரிசுகள் கொடுத்து அவளது உறவினர் வசம் அவளைச் சேர்ப்பித்து விட்டதாகச் சரித்திரம் சில தகவல்கள் கொடுக்கிறது.

காவலிலிருந்த கவர்னர் அகம்மதை விடுவித்துத் தக்க காவலுடன் கௌரவமாக பீஜபுரிக்கு அனுப்பிவைத்தான் சிவாஜி!

(தொடரும்)

அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்

கைகண்ட மருந்து

எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,

சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

ஆப்டோன் & லைன்
பிளாக்,
சைன் போர்ட்,
ரப்பர்ஸ்டாம்ப்
சீலடுகள்
செய்யுமிடம்

S.R. ப்ரதர்ஸ்

சின்னக்கம்மாளதெரு .... திருச்சி.

கோடிக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்று வருவது

வீல்மார்க் சென்னீஸ் வைரங்கள்
&
விக்டரி ஸ்டார் வைரங்கள்

தயாரிப்பவர்:—
சென்னி ருதாகிருஷ்ணன்,
பெரியபஜார்,
திருச்சினுப்பள்ளி.

சிவாஜி

ஆசிரியர் :—திருலோக சீதாராம்

கோட்டை	திருச்சி, 6—3—49 சர்வதாரி-ஞு மாசி-மீ 23-உ	முற்றுகை
14		23

சம உரிமை

சில விஷயங்களில் ஸ்திரீகள் சம உரிமை வேண்டுமென்று வற்புறுத்தும் கோரிக்கையை முழுவதும் நடைமுறையில் நிறைவேற்ற முடியாது. ஒரு கணவன் தன் மனைவியைக் காப்பாற்ற வேண்டியது என்ற நியதி சரிதான் ஆனால், ஒரு மனைவி தன் கணவனைப் போஷித்துப் பாதுகாப்பதென்றால் எப்படியிருக்கும்?

—பண்டித பார்கவா.

பர்னார்டு ஷா

வின்ஸ்டன் சர்ச்சிலும், பர்னார்ஷாவும் திர்க்கதரிசிகள் என்று கூறுவது முழுவதும் பொருந்தும். இருவரும் எந்த விஷயத்தையும் பார்ப்பதில் ரொம்ப சமர்த்தர்கள். சர்ச்சிலுக்கு ஓவியம் உயிரோடு பிறந்த ஈடுபாடு. ஷாவுக்கு அறுபது வருட புகைப்படம் பிடிக்கும் அனுபவம் உண்டு; மேலும் இக்கலையைப் பற்றி ஏராளமாக எழுதியிருக்கிறார்.

—பிரான்ஸிஸ் செல்பி.

மாட்டை அடித்துப் பாதுகை தானம்

சென்னைக்கு 'வரி பூத' பட்ஜெட்

பொன் வாத்தைக் கொல்லும் புத்திசாலித்தனம்

பொன் வாத்துக்கதை நேயர்களுக்கு நன்றாகத் தெரியுமென்று நினைக்கிறோம். இந்தக்கதை தெரியாதவர்களுக்கு இதை எடுத்துச் சொல்லும் சந்தர்ப்பத்தை நமக்கு அளித்த சென்னை அரசாங்கத்துக்கு நம்மால் வணக்கம் தெரிவிக்காமலிருக்க முடியவில்லை.

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு வாத்து இருந்தது. அது ரொம்ப ரொம்ப அற்புதமான வாத்து. வாரத்திற்கு ஒரு முறை ஒரு அழகிய பொன் முட்டை போடுமாம் அந்த வாத்து. அந்த வாத்துக்குடைய புத்திசாலி ஒரு பொன்முட்டைக்கு ஏழு நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறதே என்று பொறுமையிழந்து மனம் கலங்கிப் போய் விட்டான். அப்படிக் கலங்கியிருந்த அவனுக்குத் திடீரென்று ஒரு அற்புத யோசனை தோன்றிற்று.

இந்த வாத்தின் வயிற்றிலிருந்து தானே வாரத்துக்கொன்றாகப் பொன் முட்டைகள் வெளியே வருகின்றன, காத்துக் காத்து முட்டைகளைச் சேகரிப்பதை விட அதன் வயிற்றைக் கிழித்து விட்டால் ஒரே நிமிஷத்தில் எல்லா முட்டைகளையும் எடுத்துக் கொண்டு விடலாமல்லவா என்ற அபார யோசனை அவனுக்கு உதயமாயிற்று. கத்தியை எடுத்தான். வாத்தின் வயிற்றைக் கிழித்தான். என்ன ஆச்சரியம், வாத்தின் வயிற்றில் ஒரு முட்டைகூடக் காணவில்லை! வாத்தும் மடிந்து போய்விட்டது.

ஃ ஃ ஃ

மாட்டையடித்து 'பாதுகை' அல்லது 'ஜோடு' தானம் செய்தவன் கதையும் உங்களுக்குத் தெரியும். ஒரு மகாப்பிரபுக்கு ஏதாவது தானம் செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. சாதாரணமாக ஒருவர் கற்பனைக்கும் எட்டாத யோசனை அவனுக்கு உதித்தது. "தோல் பாதுகை" தானம் செய்வதென்று அவன் முடிவு செய்தான். உடனே ஏராளமான மாடுகளை அடித்து அவற்றின் தோலைக்கொண்டு லட்சலட்சமாகச் செருப்புத்தைத்து தானம் செய்தான். அவனுக்கு எவ்வளவு புண்ணியம் கிடைத்திருக்குமென்று சிந்தித்துப் பாருங்கள்! உங்களால் அளவிட முடியாது!

ஃ ஃ ஃ

சென்னை அரசாங்கத்தின் புது வருஷ, (1949-50) 'பட்ஜெட்' இந்த இரண்டு கதைகளையும் நம் கண் முன்னே கொண்டு நிறுத்துகிறது.

இந்த பட்ஜெட்டின் லட்சியம், சென்னை அரசாங்கத்தின் கணக்குப்படி ஏற்படும் வருமானக்குறைவை - பட்ஜெட் 'நஷ்டத்தை'-சரிக்கட்டுவதேயென்று கூறப்படுகிறது.

'விற்பனைவரி'யைக் 'கண்டு பிடித்த' ராஜாஜி **பொறுப்புடன் நிர்வாகத்திறனுடன் அந்தக்காலத்தில்** கொண்டுவந்த 'பட்ஜெட்டுக்கு பொது மக்களிடையே கிடைத்த **எதிரொலி** எப்படியிருந்ததென்று நம்மால் அதற்குள் மறந்துவிட முடியாது.

ராஜாஜியைப் பாதுகாத்த அந்த மூன்று சுகமான நிபந்தனைகளும் காணக்கிடைக்காத இன்றைய சென்னையில் 'வரி பூதத்தை' பயங்கரமாக மக்களிடையே உலவவிடும் அரசாங்கத்தின் 'அரும்பணிக்கு' என்ன எதிரொலி இருக்குமென்று யாரும் சந்தேகப்படவேண்டியதில்லை.

இப்படி ஏழைப் பொது ஜனத்தை 'பயமுறுத்தி' ஏராளமான புது வரிகள் வசூலிப்பதன் மூலம் "மூன்று கோடியே தொண்ணூறு லட்சம் ரூபாய் பட்ஜெட் நஷ்டத்தை" சரிக்கட்டுவதோடல்லாமல், பணப் பெருக்கத்தையும் குறைக்கப் போகிறார்களாம் சென்னை அரசாங்கத்தார்!

"பட்ஜெட் நஷ்டம்"

இந்த 'பட்ஜெட் நஷ்டம்' எப்படி வந்ததென்பது ரொம்ப ரஸமான விஷயம். திரு. என். எஸ். வரதாச்சாரி கூறியதுபோல, 'கருமித்தனமான' நிதிக்கொள்கையால், ஏற்கனவே பல திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகைகள் செலவிடப்படாமலேயே காத்துக்கிடக்க, ரெவின்யூ ரிசர்வ் நிதிக்குள் இந்தநஷ்டத்தை உண்டாக்கின தொகை ஒளிந்து கொண்டுவிட்டது இந்தக் கற்பனையான நஷ்டத்தால் நேர்ந்த வினையே இந்த "வரிபூதம்".

புது வரிகள்:

இந்த 'நஷ்டத்தை' சரிக்கட்டி, பணப்பெருக்கத்தைக் குறைப்பதற்காக வந்திருக்கும் புது வருட பட்ஜெட் திட்டத்தில் புகுந்திருக்கும் புது வரிகள் இதோ:—

(1) தேங்காய், எண்ணெய் வித்துக்கள், கரும்பு, மிளகாய், காப்பிக்கொட்டை, ரப்பர், வாழைப்பழம், பருத்தி, ஏற்றுமதிக்கான தேயிலை, இன்னும் சிலவற்றின்மேல் விற்பனைவரி.

(2) 1938-ம் வருடத்தில் ஸ்தாவர சொத்துக்களுக்கு இருந்த மதிப்புக்கும், இன்றிருக்கும் மதிப்புக்கும் உள்ள வித்தியாசத்தின்மேல் **கால்பங்கு** தண்டல்.

(3) பஸ்கட்டணங்களின்மேல் பன்னிரண்டரை சதவிகிதம் உபரிக் கட்டணம்.

(4) நகரசபைகளுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் செலுத்தப்படும் வீட்டுவரியின்மேல் பன்னிரண்டரை சதவிகிதம் உபரிக் கட்டணம்.

(5) மின்சாரத்தின்மேல் விசேஷ விற்பனைவரி

(6) பத்திரிகை விளம்பரங்கள், போட்டிப் பந்தயங்களின்மேல் வரி.

(7) காப்பி ஹோட்டல்கள், சினிமா தியேட்டர்கள்பேரில் மாகாண வரி.

இன்னும் சில வரிகள்.

விற்பனை வரிகள்:—

விற்பனைவரிவிதிக்கப்பட்டுள்ள பொருள்களின் எண்ணிக்கையையும், குணத்தையும் பார்க்கும்போது பொது ஜனத்துக்கு இதனால் ஏற்படும் கஷ்டம் எத்தகையது என்பது சொல்லாமலேயே விளங்கும்.

இது காறும் இந்தவரி விதிப்புக்கு ஆளாகாமலிருந்தபொருள்கள் திடீரென்று வலைக்குள் அகப்பட்டுக் கொண்டுவிட்டது வியப்புக்குரிய விஷயம். எக்காரணம் குறித்துமுன்னம் இந்த வரி விதிப்பு விலக்கு ஏற்பட்டிருந்ததோ அந்தக்காரணம் இன்னும்தான் நீடித்து வருகிறது. ஆனால் விலக்கு ஒழிந்து, வரி வந்துவிட்டது.

பணம் இருப்பவர்களுக்கு வரி போட்டால் பணம் கிடைக்கும். பணம் இல்லாதவனுக்கு வரி போட்டால் என்ன கிடைக்கும். அவன் பிராணன்தான்போகும்!

பணப் பெருக்கத்தைக் குறைக்கப்போகிறதாம் இந்த பட்ஜெட்! எப்படியென்று நமக்கு விளங்கவில்லை. பணம் இருப்பவர்கள் வரியின் பிடிப்பிலிருந்து சுலபமாகத் தப்பித்துக்கொண்டுவிடுவது நமக்கெல்லாம் அனுபவத்தில் தெரியும். பணம் இல்லாதவர்கள் தலையில் வரியைச் சுமத்தினால், அவர்கள் பணம்வேண்டும் என்று அரசாங்கத்தைப் பார்த்துத் திருப்பிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்தான் ஏற்படும். அப்புறம் நாஸிக்நகரத்து அச்சுயந்திரத்தில் புது நோட்டு அச்சடிக்கவேண்டிய நிர்ப்பந்தம்தான் ஏற்படும். இதுதான் பணப்பெருக்கத்தைத் தடுக்கும் வகையோ!

(11-ம் பக்கம் பார்க்க.)

கலியாண காலங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பட்டு ஜவுளிகளுக்கும்

பாபு இண்டஸ்ட்ரீஸ்

பிராஞ்சு :— "பாபு ஹால்" சைனாபஜார் ரோடு, திருச்சி.

Slate Manufacturers &
பட்டு ஜவுளி வியாபாரம்
டவுன் ஸ்டேஷன் ரோட்
திருச்சிராப்பள்ளி

அனுபவ ஞானியின் குறிப்புகள்



திருலோக சீதாராம்

தேசிய உணர்ச்சியும் கல்வித்துறை ஆற்றலும்

ஒவ்வொரு மண்ணும் வெவ்வேறு வளம் உடையது. பண்பாடு-கலாசாரம் என்றெல்லாம் சொல்கிறோமே இவையெல்லாம் ஒவ்வொரு மண்ணின் சீதோஷ்ண பூகோள நிலையைப் பொறுத்துத்தான் உருவாகின்றன. மனிதன் மட்டுமல்ல—ஜீவராசிகள் எல்லாமே தங்கள் உயிர் வாழ்விலும், இயக்கத்திலும் இந்த நியதிக்கு உட்பட்டவைதான்.

குளிர் நிறைந்த மேல் நாடுகளிலே இறுக்கிய கால் சட்டையும் மேலுடையும் நாகரீகமாகக் கருதப்படுகிறது—இயற்கையையொட்டித்தான். ஆனால் உஷ்ணப் பிரதேசமான இந்தியாவில் அந்த உடை இயற்கைக்கு மாறானதாகும். மேல் நாடுகளிலே பிரம்மச்சாரிகள் மணம் செய்துகொண்டு இல்லறம் அனுஷ்டிக்க அரசாங்கத்தார் பண உதவியும் பிரசாரமும்கூட செய்ய வேண்டியிருக்கிறது. ஆண்டுதோறும் பயங்கரமாது அளவில் ஜனத்தொகை பெருகிக்கொண்டிருக்கும் நம்முடைய நாட்டில் மேல்நாட்டு முறையைக் கடைப்பிடித்து இல்லறப் பெருமையை வலியுறுத்த வேண்டிய அவசியம் எங்கே இருக்கிறது? அன்றாட வாழ்க்கை முறை—நடையுடை பாவனைகளில் நமக்கு முற்றிலும் மாறுபட்டது மேல்நாடு.

மனிதன் செயலிலும் அறிவிலும் ஓங்கி வளர்வதைத்தான்—அந்த வாழ்க்கை முறையைத்தான்—நாகரீகம் என்று சொல்லுகிறோம். இடத்திற்கு ஏற்ப இயல்பாக அமையும் வாழ்க்கை முறையை ஏற்று அதைச் சிறப்புற வளர்ப்பது நாகரீகம். ஆனால், இன்று எந்த விஷயத்தையும் காலதூர வர்த்தமானம் கடந்து அகில உலக ரீதியில் பார்த்துப் பழகவும் நடைமுறையில் கொண்டுசெலுத்தவும் கூடியநிலைமையில் இருக்கிறோம்.

அரசியல் பொருளாதாரத் துறைகளில் எல்லா தேசங்களுடனும் நமக்குத் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொடர்பில் நாம் எவ்வளவு தூரம் எச்சரிக்கையாக இருந்திருக்கிறோம் என்பதைப் பார்க்கும்போது பெரும்பாலும் நாம் அடைந்திருக்கும் லாபத்தைவிட நஷ்டமே அதிகமாக இருக்கிறது. அதாவது தேசீயம் குலைந்து போகிறது.

“உப்பென்றும் சீனியென்றும் உள் நாட்டுச் சேலை யென்றும் செப்பித் திரிவாரடி” என்று நடிப்புத் தேசபக்தர்களைப் பாரதி சித்தரித்துக் காட்டுகிறார். நாயுடு அவர்களைப் பொறுத்தவரையில் அவர் இந்தியாவின் தேசீய ஸ்தாபனமான காங்கிரஸ் மகாசபையுடன் “தேச விடுதலை” என்ற ஒன்றைத் தவிர மற்றெல்லா வழிகளிலும் மாறுபட்ட கொள்கையுடையவர். அவரைத் தேசீய வாதியாகக் கருத காங்கிரஸ்காரர்களுக்கு மனம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர் பழுத்த தேசியவாதி.

இந்திய மாணவர்கள் இங்கிலாந்திலே—பாரிஸிலே காலடி வைத்த மூனறு மாதங்களுக்குள் எப்படியெல்லாம் உரு மாறி—உணர்வுமாறி—நடையுடை மாறிச் சீர் கெட்டுப் போகிறார்கள் என்பதை மிகுந்த வேதனையுடன் கவனித்திருக்கிறார். அந்தக் காட்சிகளைப் படம் பிடித்தும் வந்திருக்கிறார்.

மாணவர்கள் இங்கிலாந்து சென்று படித்துத் திரும்பினாலும் அவர்கள் பெறும் கல்வியறிவு அல்லது இலாபம் பத்து சதவிகிதமென்றால், நமக்குக் கொஞ்சமும் அவசியமற்ற மேல்நாட்டு வெளிவேஷங்களிலே மனதைப் பறிகொடுத்து அந்தச் சேற்றைப் பூசிக்கொள்வதன் மூலம் 90 சதவிகித நஷ்டம் அடைகிறார்கள் என்பதே நாயுடு அவர்களின் ஆராய்ச்சி முடிவு. அங்கு பெறும் கல்வி அல்லது அறிவுக்காக இந்திய மாணவர்கள் செலவிடும் நேரமும் செல்வமும் பத்து சத விகிதம்கூடப் பயன் தருவதாயில்லை என்கிறார் அவர். எந்தத்துறைபற்றிய கல்விக்காக மேல் நாடு சென்றாலும் அந்தத் துறையின் அடிப்படையான ஒரு சிலவற்றையாவது இங்கிருக்கும்போதே அனுபவ பூர்வமாகச் செயல் புரிந்தும் படித்தும் தன்னைத் தகுதியாக்கிக்கொண்டு சென்றால் வெளி நாட்டில் பெறும் பயிற்சி ஓரளவு பயன் தரலாமென்பது அவர் கருத்து. அத்துடன் நமக்குச் சற்றும் பொருந்தாத நாகரீகங்களைக் கண்டு மயங்குவது மதியீனமாகுமென்றும் அவர் அறிவுறுத்துகிறார்.

நாயுடு அவர்கள் பல்வேறு நாடுகளுக்கும் சென்று தொழில் துறைகளில் ஆராய்ச்சியும் பயிற்சியும் பெற்றுவந்திருக்கிறார். ஆனால் தன்னுடைய ஒன்பதாயிரம் கிளாஸ்கோ மூல கச்சமும் சில்க் ஷர்ட்டும் மலையாளத் துண்டும் அவர் மாற்றியதில்லை. லண்டன் போன்ற நகாங்களில் இப்படி அசல் தமிழ் மகனாகவே அவர் தெருக்களில் நடமாடி வந்தார் என்பது நமக்கு ஆச்சர்யமாக இருக்கிறதல்லவா? இதைவிட அசல் தேசீயம் ஒன்று இருக்கிறதா?

நாயுடு அவர்களின் தேசீய உடையில் அவரை இங்கிலாந்தில் சந்தித்தபோது ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் திகைத்தே போனார். ஒரு வைபவத்தின்போது இந்த சம்பவம் பற்றி ஆர். கே. எஸ். அவர்கள் கூறிய வாக்கியங்களைக் கீழே தருகிறேன்.

“1932-ல் அரசாங்க அலுவலாக நான் லண்டன் மாநகரம் சென்றிருந்தேன். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே அங்கு சென்றிருந்த நாயுடு அவர்கள் ஒருநாள் அதிகாலையில் நான் தங்கியிருந்த விடுதிக்கு என்னை சந்திக்க வந்தார், அவர் வந்திருக்கும் செய்தியை அறிந்து நான் அவரை எதிர்கொள்ள வேண்டிக் கீழே இறங்கி வந்தேன். தமிழ்நாட்டில் அவர் இயல்பாக எப்போதும் காணப்படும் உடையிலேயே அங்கும் அவர் காக்ஷியளித்ததும் எனக்கு ஏற்பட்ட வியப்பு சொல்லத் தரமன்று. ஹாட்டும் சூட்டும் போட்டு மிடுக்காகத்திரியும் அந்த இடத்தில் தமிழ்நாட்டு உடையுடன் நடமாட வேண்டுமானால் அதற்கு எவ்வளவோ மெய்த்துணிவு வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் அவருடன்கூட அந்த இடத்தில் தெருவில் செல்ல எனக்குத் தைரியம் வரவில்லை. கடைக்கு அழைத்துக்கொண்டுபோய் ஒரு சூட் வாங்கி அணிந்துகொள்ளும்படி வற்புறுத்தினேன். வருஷம் ஒன்பது ஆகிவிட்டபோதிலும் இன்னும் அவர் அதை அப்படியே வைத்திருக்கிறார். எனக்காக அவர் அதை சில சமயம் வேடிக்கைக்காக அணிந்திருந்தாரென்றாலும் இந்தியாவுக்குவந்த பிறகு அவர் அதை உபயோகித்தாரா என்பது சந்தேகம்”.

உடையிருக்கட்டும், நாயுடு அவர்கள் மேல்நாட்டில் சேர்த்த அறிவும் தொழில் நிபுணத்தன்மையும் நம்முடைய தேசீய லாபங்களேயாகும். கல்வித் துறையில் நாயுடு அவர்கள் சேகரித்திருக்கும் சலனப் படங்கள் அபூர்வமானவை. பல ஆண்டுகள் கல்லூரிகளிலோ—சுற்றுப் பிரயாணங்களிலோ—நூல்களிலோ சேகரிக்க வேண்டிய, பூகோளம், விஞ்ஞானம், உடற்கூறு, விவசாயம், யந்திரம் ஆகிய ஞானங்களையெல்லாம், நேருக்கு நேர் சில மணிநேரங்களில் போதிக்கும் கல்விச் சலனப் படங்கள் அவை. லக்ஷக் கணக்கில் செலவிட்டு அவற்றை அவர் சேகரித்திருக்கிறார். அவற்றையெல்லாம் அவர் திரையிட்டுக் காட்டினால் முற்றிலும் கண்டு முடிக்கப் பல வாரங்களாகுமென்று நினைக்கிறேன். கல்வி கற்பிக்க இப்படங்கள் மிகப் பயனுடையவை. நாயுடு அவர்கள் வெளிநாடுகளில் ஆர்டர்கொடுத்து இன்னும் வந்து சேராமலிருக்கும் படங்கள் எவ்வளவோ மதிப்புடையன. அரசியலாரின் ஒத்துழைப்பு இன்மையினால் அவருடைய இந்த விருப்பம் முழுதும் நிறைவேறாமலிருக்கிறது.

“கோபால் பாக்”கில் அவருடைய சொந்தத் தியேட்டர் இருக்கிறது. அங்கு சிற்சில

(12-ம் பக்கம் பார்க்கவும்)

TRADE MARK
CVR
குவாலிடி காப்பி
திருச்சி.

கரூர் டி. மு கோர்ட்டு

O. S. No. 383/1948

மாரப்ப கவுண்டர் —வாதி

1. சாமியப்ப கவுண்டர்
2. கந்தசாமி கவுண்டர்

—பிரதிவாதிகள்

ஷை நம்பரில் தாவா பூமிகள் சுவாதீனத்திற்கும் மாசூல் நஷ்டத்திற்கும தாவா செய்து 14-3-49 பகல் 10 மணிக்கு விசாரணை வாய்தா. ஆக்ஷேபணை தெரிவித்துக்கொள்ளாவிடில் ஒரு கக்ஷியாய் முடிவாய்விடும்.

A. Ranga Iyengar,
26-2-48 Pleader.

ஆர். கே. வி.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தின் உயர்நிலையில் உள்ளவர்கள் என்பதாகச் சொல்லிக்கொள்கின்றவர்கள் சமாச்சாரமே இப்படி என்றால், படிப்பில்லாத ஏழைமக்களாக வறுமையில் வாடும் லட்சக்கணக்கான மக்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? வியாதி வந்தால்கூட ஆஸ்பத்திரிக்குப் போகாமல் வீட்டோடு கிடக்கும் ஜனங்களுக்கு மருந்தின் மகிமைகளையோ, தொத்து நோயின் தீமையையோ எப்படி எடுத்துச் சொல்வது? இந்தக்கஷ்டமான காரியத்தில் தம் பங்கை மிக நன்றாகச் செலுத்தி வருகிறார் வெங்கடசாமி. 'கௌரவ காரியதரிசி' தான் என்றாலும், சம்பளத்திற்கு வேலை செய்கிறவரைப்போல் தம்மை ஒரு தொண்டராகப் பாவித்து பணி புரிந்துவருகிறார் அதிகாரிகளை, முதலாளிகளை, கொடையாளிகளைக்காண அங்கு மிங்கும் ஊருக்கு ஊர் அலைந்து திரிந்து பாடுபடுகிறார். அப்படித் திரிந்தும் இன்னும் அவருக்கு நிம்மதி ஏற்படவில்லை ஏன்? இன்னும் செய்யவேண்டியது எவ்வளவோ பாக்கி இருக்கிறது.

பெருந்துறை சானடோரியத்தைப் பலப்படுத்த மேலும் லட்சக்கணக்கில் பணம் தேவையாக இருக்கிறது. கட்டிடங்கள், நவீன வசதிகள் பலசெய்ய வேண்டி இருக்கிறது. அத்துடன் குணமானவர்களை-மேலும் சிலகாலம் அங்கேயே வைத்திருந்து 'டெஸ்ட்' செய்து பார்க்க அல்லது குணமானவர்கள்சிறிது காலத்தில் நலிவடைந்தால் மீண்டும் குணப்படுத்த அவர்களுக்காக பல தொழிலும்—சௌகர்யமும் செய்து தரவேண்டி இருக்கிறது. குறிப்பாக நடுத்தர—ஏழைமக்களை மனதில் வைத்துக்கொண்டு இதை எழுதுகிறேன் இந்தக் காரியங்களை வெற்றிகரமாகச் சாதிக்க—நிதி தான் முக்கியதேவை. இது நிறைவேற சர்க்காரும், பொதுமக்களும் முனைந்து நிற்கவேண்டும். பல வெங்கடசாமிகளும் வேண்டும் என்கிறேன்!

ஆர். கே. வெங்கடசாமியை எண்ணினால் அவருடைய அன்பும், பிரியமுந்தான் என்முன்னே நிற்கின்றன. ஜன சமூகம் சுகம் பெற எத்தனை இன்னல்படுகிறார்! எவ்வளவு சிரமங்களை ஏற்றுக் கொள்கிறார்! ஓகோ, நல்லவர்களுக்கே எக்காலமும் இம்மாதிரி அனுபவம்தான் போலும்!

தியாகராஜர் சரிதம்

சென்னையிலிருந்து வெளியாகும் கலைப்பத்திரிகையான "நாட்டியம்" ஆசிரியர் திரு. ரஞ்சன், பி. ஏ. எம். லிட். எழுதுகிறார் :—

"நாட்டியத்தின் மூலமாக ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் அதிகார பூர்வமான சரிதம் ஒன்றைப் பிரசுரிக்க விரும்புகிறேன். ஆராய்ச்சியாளர், சங்கீத வித்வான்கள், கலா ரசிகர்கள் ஆகிய அனைவருக்கும் இதுபற்றிய ஒரு வேண்டுகோள் விடுக்க நினைக்கிறேன். என்னுடைய இம் முயற்சி வெற்றியுற இவர்களது நேரடியான ஒத்துழைப்பைக் கோருகிறேன். இந்த சேவையில் எம்முறையிலும் பங்கெடுத்துக்கொண்டு எனக்கு உதவி செய்வோருக்கு அந்த உதவிக்கான காணிக்கையையும் செலுத்த ஆயத்தமாயிருக்கிறேன். இது சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள விரும்புவோர் ஸ்ரீ ரஞ்சன், ஆசிரியர் 'நாட்டியம்', 49 கதீட்ரல் ரோடு, சென்னை-6, என்ற விலாசத்துக்கு எழுதவும்."



சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினேம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 6—3—49

கவிக் குயில் மறைவு

இந்தியாவின் ஏகத் தனிக் கவிக் குயில் நம்மை விட்டுப் பிரிந்துபோய் விட்டது. அமர லோகத்தின் இன்னிசையை இங்கு, இந்தப் பூவுலகில், இசைத்து ரீங்காரம் செய்த மதுகரம் இனி நம்மிடையே இல்லை. ஒலி வடிவில் ஆகாயத்தில் உலவும் இசை இழைகளைத் தேடித் திருவும் இதய ஏக்கம் நமக்கிருந்தால், செயின்ட் ஜோனுக்கு காதரின் தெய்வத்தைக் கண்ணாரக் காண வாய்ப்பு இருந்ததுபோல், கவிக்குயிலின் இசையைக் காதால் கேட்க நமக்குக் கொடுத்து வைத்திருக்கலாம்!

ஸரோஜினி தேவி இந்திய சரித்திரத்தில் நுழைந்தது கலைச் சீமாட்டி என்ற முறையில் தான். பிரிந்து செல்லுங்கால் நாட்டில் அவளுக்குத் தோன்றியிருந்த தாய்மைப் பண்பு, பசுமை நிறைந்த அவரது இளமையில் கலையழகியின் அரும்பாக இருந்தது.

1879-ல் ஹைதராபாதில் டாக்டர் அகோரநாத சட்டோபாத்யாயாவின் முதற் பெண்ணாகப் பிறந்து, சிறு வயதில் உயர்தரக் கல்வியை முடித்து, லண்டனிலும், கேம்பிரிட்ஜிலும் அதற்கு மகுடம் வைத்துத் தாய் நாடு திரும்பிய ஸரோஜினியை பம்பாய் நகரம் வசீகரித்தது. ஆங்கிலக் கவிதையின் "பொற் சிறகு பளிச்சிடும், அலங்கார சகாப்தத்தின் கடைசி நாயகியாக இருந்த பெருமை நம் கவிக் குயிலைச் சாரும். ஆர்தர் ஸிமன்ஸ், எட்மண்ட் காஸ் போன்ற ஆங்கில ரஸிக—விமரிசகர்கள் ஸரோஜினியின் மூன்று கவிதைத் தொகுதிகளையும் அமோகமாக வரவேற்றுக் கொண்டாடினர்கள்.

இசையொலிக்குப் பொருத்தமான ஸரோஜினியின் கவிதைகளில், முழங்கை வரை அடுக்கப்பட்ட வளையலின் கலகலப்பும், அருணோதயத்தை எதிர்கொண்டு கட்டுமரமேறிக் கடலாடச் செல்லும் கரைப்புறத்து மரபினரின் 'ஏலேலோ' நாத இழையும் நின்றொலிப்பதைக் கண்டு மயங்காத கலாரஸிகர் இருக்க முடியாது.

சுதந்திரப் போராட்டத்தில் நெடுங்காலம் அவர் ஈடுபட்டிருந்ததும், மகாத்மாவின் நெருங்கிய நட்பு பூண்டிருந்ததும், பெரிய அரசியல் திருப்ப காலங்களில் முதன்மை வகித்ததும் அவரது பெருமையின் சிறு அம்சமே.

ஸரோஜினி தேவியின் நாவன்மையும், சொல்லழகும், ஹாஸ்யச் சிறப்பும் அவருக்கு முதிய பரம்பரையினரிடையேயும், பாலரிடையேயும் மகத்தான செல்வாக்கை உண்டாக்கியிருந்தன.

சத்ய மூர்த்தி, ஜின்னு, போன்ற பழைய புலிகளுடன் தோள் தட்டி நின்று நாடெங்கும் கலகலப்பும், செயலாக்கமும் ஊட்டிவந்த ஸரோஜினியின் பழைய பொற்காலம் ரஸனைக்குரியது.

ஸரோஜினியின் மறைவு பிரசித்திபெற்ற ஒரு குடும்பத்துக்குப் பெரு நஷ்டமென்பதுடன், நாட்டிற்கு மகத்தான தொரு துயரமாகும். மோதிலால், சாப்ரு, ஜயகர் போன்ற அதிமானுடர் வரிசையில் சேர்க்கத் தக்க ஒரு சிலர் சமீபகால காங்கிரஸ் அணிவகுப்பிலும் இருந்தனர் என்பதை எடுத்துக்காட்ட ஸரோஜினி ஒரு மகத்தான உதாரணமாகக் கொள்ளப்படலாம்.

மத்திய பட்ஜெட்

இந்திய சர்க்காரின் புது வருஷத்திய பட்ஜெட் சாஸ்திர ரீதியான ஒரு பட்ஜெட்டாகத் திகழ்வதைக் காண சந்தோஷம் ஏற்படுகிறது. டாக்டர் மத்தாயின் பட்ஜெட் பிரசங்கம் கருத்துத் தெளிவும் தீர்க்க தரிசனமும் நிறைந்திருப்பது முதல் முதலாகப் பாராட்டுக்குரியது.

பொதுஜனத்தை முக்கியமாகக் கவரும் மத்திய பட்ஜெட் அம்சம் தபால் கட்டண உயர்வு பற்றியதுதான். கவர் விலை இரண்டணாவாகவும், கார்டு விலை முக்காலணாவாகவும் உயர்ந்திருப்பது முதல்பார்வைக்கு சங்கடம் விளைப்பதுபோல் தோற்றினும் தபால் போக்கு வரத்தை உருப்படியாக துரிதப்படுத்தி ஆகாய மார்க்கத்தையே பெரும்பாலும் பயன்படுத்திக்கொள்ளும் நிச்சயம் ஆறுதலளிப்பதாயிருக்கிறது.

விரிவடைய வேண்டிய பொருளாதாரத்துக்கு இசைவான பல அம்சங்கள் பட்ஜெட்டில் காணப்படுகின்றன. பணப் பெருக்கத்துக்கு இந்த பட்ஜெட்டும் தூண்டுதல் செய்யுமோ என்று எழும் சந்தேகம், வகுக்கப்பட்டுள்ள புது வருட பொருளாதாரத் திட்டத்தினால் தீர்க்கப்பட்டு நம்பிக்கையளிக்கிறது.

சென்னை பட்ஜெட்டில் போலவே பொதுஜனத்தை பாதிக்கும் வரி விதிப்புக் கொள்கை இதிலும் பிரதான அம்சமாயிருக்கிறதென்பதை மறுக்க முடியாது. இதன் பின்னணியில் நிற்கும் பொருளாதாரத் திட்டம் நடைமுறைக்கு வந்து வெற்றியடையுமென்ற நம்பிக்கையே இந்த அம்சத்தின் வீர்யத்தைச் சற்றுக் குறைத்துக் காட்டுகிறது.

பட்ஜெட் தயாரிப்பிலும், வரி விதிப்பு விஷயத்திலும் மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டியதன் அவசியத்தை, பல மாகாணங்களின் புது வருட பட்ஜெட் திட்டங்களிலிருந்தும் உணர்கிறோம். இரட்டை வரிவிதிப்பும், வரி விதிப்பு விகிதாசாரக் கோணலும் இன்னும் பல தொந்திரவுகளும் இத்தகைய தொடர்பின்மையால்தான் நேருகின்றன. இது விஷயத்தை மத்திய சர்க்கார் உடனடியாக கவனித்து ஆவன செய்யவேண்டும்.

தலைவர் தேர்தல்

புதுவருடத்துக்கான சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தல் இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டிலும் சட்டசபை பட்ஜெட் செஷனும் தலைவர் தேர்தல் காலமும் நெருங்கி ஒரேசமயத்தில் வந்து கொண்டிருப்பது முக்கிய கவனத்துக் காளாகியிருக்கிறது. ஸ்திரமற்ற கட்சி அரசியல் வாடையில் விவாதிக்கப்படும் பட்ஜெட் உண்மையில் போதுமான கவனத்துக்கும், அக்கரைக்கும் உட்படாமல் உபயோகமற்ற காலங்கடத்தலாக ஆகிவிடுகிறது என்பதை எடுத்துக் காட்டிய முத்தையா செட்டியாரவர்கள், பட்ஜெட் விவாதத்தை சிலநாட்கள் ஒத்திப் போட்டுவிட்டு தலைவர் தேர்தலை முதலில் முடித்துக் கொண்டு பின்னர் பட்ஜெட்டை கவனிக்கலாம் என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசி காளா வெங்கட் ராவ் இந்த மாகாண சட்டசபைத் தலைவர் தேர்தலை வருடத்துக்கொருமுறை வைத்துக்கொண்டு அவதியடைவதை விட ஒவ்வொரு தலைவருக்கும் பதவிக் கால அளவை அதிகரிக்கலாம் என்று யோசிப்பது கவனத்துக்குரிய விஷயம்.

இவ்வாண்டு கட்சித் தலைவர் தேர்தல் சம்பந்தமாக ஏது பரபரப்பும் இருப்பதாகத் தென்படவில்லை. சர்தார் படேலின் விஜயத்துக்கு முன்பு பரபரப்பு ஏற்படலாமோ என்றிருந்த சூசகத்தை படேலின் விஜயம் அகற்றியிருப்பது போல் தோன்றுகிறது. இந்த ஊகத்தில் அதிகப் பிழை இருக்காதென்றே நினைக்கிறோம்.

இவ்வாண்டுக்குப் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. அப்படி புதியவர் தேர்ந்தெடுக்கப் பட்டாலும் மந்திரி சபையில் பெரிய மாறுதல்கள் ஏற்படுமென்று நாம் நினைக்கவில்லை. சென்னை கவர்னரின் டெல்லி விஜயத்துக்கும் வரப் போகிற தலைவர் தேர்தலுக்கும் ஏதாவது தொடர்பு இருப்பின் நாம் அதிகம் வியப்படைய வேண்டியதில்லை.

சென்னைக்கு 'வரி பூத' பட்ஜெட்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக வேலை செய்கின்றன. ஏற்கனவே ஆண்டிகளாயிருப்பவர் தலைகளை திரும்பத் திரும்ப மொட்டையடிக்கும் வரி விதிப்புக்கொள்கை புத்திசாலித்தனமானதென்று நிச்சயமாகக் கூற முடியாது!

மேலும், வசூலிக்கப்பட்ட பொது வருமானத்தைத் திறமையாக, உபயோகமாகச் செலவிடும் அறிவே நம்மிடையே காணக் கிடைக்கும் பொருளாக இல்லை. நமது பட்ஜெட்டுகளைப் பார்த்தாலே இந்த உண்மை புலப்படும். யாரோ ஒருவர் கூறியது போல "முழு சூன்யர்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரை சூன்யர்கள்" அதிகாரம் வகிக்கும் "ஜனநாயக" அமைப்புகளில் இப்படித்தான் இருக்குமென்றால் ஜனநாயகத்தால் வெடி மோட்சமே ஏற்படாதென்றுதான் பயப்பட வேண்டியிருக்கிறது.

வரி விதிப்பதில் சில முக்கிய "பாடங்கள்" உண்டு என்று பாடப்புத்தகங்கள்கூடக் கூறும். பொது ஜனத்தை பயமுறுத்தும் வகையில் நேரடியாக வரி வசூலிக்கக் கூடாது என்று கூறுவார்கள். இதை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை.

கொண்டு செலுத்தச் சக்தியின்றி வகுக்கும் காகிதத் திட்டங்களுக்காகப் பொதுப் பணத்தை பயங்கரமான முறைகளின் மூலம் அரசாங்கப் பொக்கிஷத்தில் சேமித்து வைத்து, அதில் பெரும்பகுதியைத் தாறுமாறுகச் செலவிட்டு, உறு பயன் ஏதுமின்றித் தவிக்கும் நிர்வாக யந்திரத்தை எங்ஙனம் பாராட்டுவதென்று நமக்கு விளங்கவில்லை.

ஆழ்ந்து யோசனை செய்யும் போது நமது சமூக அமைப்பையே அடிப்படையில் மாற்ற முனைந்தாலல்லாது எவ்விதமான நிர்வாக காரியங்களாலும் ஏழைப் பொது ஜனத்துக்கு எவ்வித நலனும் நேராதென்பதுடன், நாளுக்கு நாள் க்ஷீணம் தான் நேரிடும் என்பதை மறுக்க இடமில்லாமல் போகிறது.

காதல்

கணித சாஸ்திர நிபுணர்கள் வெற்றிகரமான காதலராயிருக்க முடியாதென்று பலர் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் உலகத்திலேயே மிக வெற்றிகரமான காதலர் ஒரு கணித சாஸ்திரிதான் என்பதை யாரும் உணரவில்லை. — டாக்டர் ஹார்டி.

Regd No. M. 3398. THE 'SHIVAJI'

சிவாஜி சிறுவர் மலர்

சிவாஜி
சிறுவர் மலர்

"மூர்த்தி" ("வாண்டு மாமா")

சிவாஜி வாரப்பத்திரிகை 6—3—49 அனுபந்தம்—முற்றுகை 14

உன்னால் முடியுமா?

அதோபார் தம்பி! அந்தத் தங்கை தன் வீட்டுக்குப் போகும் வழியை மறந்து விட்டாள். நேரமோ ஆகிவிட்டது. இருட்டிக்கூட விட்டது. பாவம் அந்த நாய்க்குக்கூட வழிதெரியவில்லை. எங்கே நீ அவளை அவள் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போயேன்!

(1) 1லிருந்து 9 வரையுள்ள லக்கங்களை ஒரு குறிப்பிட்ட முறையில் (9 லக்கமுள்ள எண்ணாக) அமைத்துக்கொள்ள வேண்டும். அந்த எண்ணை ஒரு (1 to 9 களுள்) உள்ள எண்ணால் வகுத்தால் வரும் ஈவு 8 லககமுள்ளதாக இருக்கவேணடும். மீதி வரக்கூடாது. ஈவில் வகுக்கும் எண்ணும் இருக்கக்கூடாது. எங்கே உன்னால முடியுமா?

(2) சென்ற வருஷம் கிட்டு லீவில் கிராமத்துக்கு போயிருந்தபோது ஒரே மழையாம். அவன் அங்கு தங்கி இருந்த நாட்களில் 9 நாட்கள் மழைதானாம். ஆனால் ஒரு வேடிக்கை. காலையில் மழை பெய்தால் மாலையில் மழை இருக்காது. மாலையில் மழைபெய்தால் அடுத்த நாள் காலையில் வெயில் அடிக்குமாம். இப்படி 7 காலையும் 8 மாலையும் மழை இல்லாதிருந்ததாம். அப்படியானால் கிட்டு எத்தனை நாள் கிராமத்தில் தங்கி இருந்தான்?

விடை (1) 6 | 195287346

32547891

(2) 12 நாட்கள்

குட்டித் தொடர் கதை — 'பூனை

மூன்று எலிக் குட்டிகள்
13. பறக்கும் பூதம்!

முன் கதைச்சுருக்கம்

(காமு. என்றொரு எலிக்குட்டி. அதற்கு மீனு, ஜானு என்று இரண்டும் பெண்கள். இரண்டும் படு சுட்டிகள். காமு தன் இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு சிநேகிதி சுசீலா நடத்தும் நிலாச் சாப்பாட்டுக்குப் போகிறது. வழியில் நேர்ந்த ஆபத்தால் மீனு மட்டும் வீட்டுக்குத் திரும்பிவிட காமுவும், ஜானுவும் விருந்துக்கு போகிறார்கள்.)

ஜானுவின் பிரசங்கத்தைக் கேட்ட விருந்தினர்கள் "பலே! பலே! எது குட்டி ரொம்பக் கெட்டிக்காரி போலிருக்கே!" என்று கொண்டாடின. காமுவுக்குப் பெருமை தாங்கவில்லை.

அப்போது ஒரு கொழுத்த எலி எழுந்து பேச ஆரம்பித்தது. "குழந்தை காரசாரமாகத்தான் பேசினாள். இளமை முறுக்கல்லவா? உலக அனுபவம் போதாது. நான் ஐந்து வருஷமாக பார்வதி பவன் பட்சணக்கடையில் வசிக்கிறேன். எனக்கு முதலில் உணவளித்து விட்டுத்தான் அவன் சாப்பிடுகிறான். இப்படி எவ்வளவே இருக்கிறது. சரி எனக்கு நாழியாகிறது. பிறகு பட்சண பீரோவை மறதியாகச் சாற்றி விடுவார்கள். நான் வருகிறேன்" என்று சொல்லி ஒரு பெரிய கொட்டாவி விட்டுக்கொண்டே எழுந்து சோம்பல் முறித்துவிட்டு சுசீலா சுந்தரத்திடம் விடைபெற்றுக் கொண்டு சென்றது. அப்போது ஒரு வாலிப எலி ஜானுவை ஓரைக்கண்ணால் பார்த்துக் கொண்டே சுசீலாவின் கணவன் சுந்தரத்திடம் "நான் மிஸ். ஜானுவின் அபிப்பிராயத்தை ஒட்டி இரண்டு வார்த்தை சொலல நினைக்கிறேன்" என்றது. ஜானுவின் பக்கம் பேசி அவள் அன்பைப்பெற அவனுக்கு ஆசை. வாலிபனல்லவா? அதற்கு சுந்தரம் பதில் சொன்னாரோ என்னவோ தெரியாது. திடீரென்று சூறாவளி போன்ற ஒரு பேய்க்காற்றுக் கிளம்பியது. மொட்டை மாடியில் நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்திருந்த அவர்களை நோக்கி குபீர் என்று ஒரு பிரமாண்டமான இருட்டு வந்து கவ்வியது. அந்த இருட்டில் ஒரு வெள்ளை உருவம். அதற்கு உருண்டையான ரத்த நிறக்கண்கள். 'டபக்' என்று அது சுந்தரத்தைத்தன் கால்களால் இடுக்கிக் கொண்டு தூரத்தில் தெரிந்த கோயில் கோபுரத்தை நோக்கிப்பறந்தது. சுந்தரத்தின் கதி?

(தொடரும்)

'வாண்டு மாமா' பேசுகிறார்!

தம்பி தங்கைகளுக்கு ஆசீர்வாதம்!

இந்த இதழிலிருந்து உங்கள் மலரில் புது வாசனை வீசுகிறது. சிறுவர் மலர் இனி ஒரு அணாவிலைக்குத் தனியாகக் கிடைக்கும். உங்களுக்குச் சந்தோஷந் தானே!

புதிதாக மலர் வாங்கும் அம்பிகளுக்கு இவ்வளவு நாளாக வெளியான கதைகளின் முன்கதைச் சுருக்கங்களை இந்த இதழில் ஒவ்வொரு தொடருக்கும் கொடுத்திருக்கிறேன்.

அதோடு கணபதிராயர் தேவலோக ரேடியோவிலிருந்து பேசும் 'பாலர் பாரத'த்தை 'கொழுக்கட்டை' ஒலிப்பரப்புகிறார்.

'ஏசாப்பு' என்ற பழங்காலத்துத் தாத்தாவின் நீதிக்கதைகள் தொடர்ந்து வெளிவரும். அதுதவிர இனி, உலக அதிசயங்களை எல்லாம் பற்றி வரும் இதழ்களில் சொல்லப்போகிறேன்.

அம்பி, அடுத்த இதழில் ஒரு பரிசு! ரூ 10. ரொம்ப சுலபமான பரிசு. ஏன் அவசரப்படுகிறாய்? அடுத்த இதழ்வரை பொறுத்திரு தம்பி!

— "வாண்டு மாமா"

'பலூன்' படுக்கை!



1. இந்தக் கட்டாந்தரையில் படுத்தால் உடம்பு எதற்கு ஆகும். சேச்சே! 2. ஆ' ஒரு பலூன்! போங்கடா 'வாண்டுப்பசங்களா!



3. "அடடா என்ன சுகமான படுக்கை. ஆனந்தமா இருக்கு. 4. இந்தப்பலூனை அவிழ்த்து விட்டுடலாம்! பிறகு பாரேன்



5. கொஞ்சநாழியில் பார்வேடிக்கையை! 6. பலூன் ஒரு மரக் கொம்பில் இடிக்கவே! 'படார்' மறுபடியும் கட்டாந்தரை!

பாலர் பாரதம்

[இது அகில தேவலோக ரேடியோ-குழந்தைகளுக்கான பிரத்யேக ஒலிபரப்பு! கணபதியார் பேசுகிறர். விஷயம் பாலர் பாரதம்]

1. ஹலோ! ஹலோ!

குழந்தைகளே ஆசிர்வாதம்! என்னைத் தெரிகிறதா? நான்தான் தும்பிக்கையாழ்வார்! தொந்திக்கணபதி! எப்படிக் கூப்பிட்டாலும் சரி! நான் இப்போது தேவலோக ரேடியோவிலிருந்து உங்களுக்காகப் பேசுகிறேன்! 00000 மீடரில் என் பேச்சுக்களை மிஸ்டர் "கொழுக்கட்டையார்" இனி ஒலிபரப்புவார்! என்ன பேச்சுத் தெரியுமா? பெரிய பேச்சு. ஆமா கதை கதையாப் பேசப்போறேன். ரொம்ப ரொம்ப ரொம்ப ஆயிர வருஷங்களுக்கு முன்னுலேகூட இப்போ நான் பேசறதை எல்லாம் ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்தேன். அது பெரிய கதை!

ஆமா! கதையேதான். மகாபாரதம்னு கேள்விப்பட்டிருப்பயே! பீமசேனன் என்ற அற்புத வீரனையும, அர்ச்சுனன் என்ற புகழ்பெற்ற வில்லாளியையும் தருமர் என்ற பொறுமை சாலியையும்பற்றிச் சொல்லும அபாரமான கதை அது. உங்கள் வீட்டில் தாத்தா பாட்டி யாரும் உங்களுக்கு அந்தக் கதையைப்பற்றிச் சொன்னதில்லையா? சொல்லி இருப்பார்கள். நீங்கள் மறந்திருப்பீர்கள். ஒரு வேளை உங்கள் அப்பாவுக்கே அந்தக்கதை மறந்திருக்கலாம். காலம் கெட்டுப்போய்க்கொண்டிருக்கிறது பாருங்கள்!

போனுல் போகட்டும்! நான் இப்போது அந்தப்பெரிய கதையைத்தான் உங்களுக்குச்சொல்லபோகிறேன் ஆனுல் அதற்கு முன்னுல்; நான் முதலில் ஒரு தடவை இந்தக் கதையை எழுதியதாகச் சொன்னேனல்லவா? அதுவே ஒரு வேடிக்கையான கதைதான். அதைச் சொல்லுகிறேன்!

ஆமாம் ஒரு நாள் நான் எங்க அப்பா ஊரில எங்க அப்பா யார் தெரியுமல்லவா? பரமசிவன் தான். நெற்றிக்கண்ணன் என்றுகூடச் சொல்லுவீர்களே! அவரேதான். அவர் ஊர் கைலாசம். நான் அப்போது உங்களைப் போலச்சின்னக் குழந்தை. நானும் சுப்புவும் (அதுதான் 'சுட்டிப்பய சுப்பாமணியன்) விளையாடிக் கொண்டிருந்தோம். எங்கள் விளையாட்டை அம்மா (பார்வதி) பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். திடீரென்று என்னை யாரோ நினைப்பதுபோலிருந்தது. என்னை யாராவது உள்ளன்புடன் நினைத்தால்போதும். எனக்கு உடனே தெரிந்து விடும்.

டக்கென்று என்னை வியாச மகாமுனிவரின் முன் போய் நிறுத்திற்று மூஞ்சூறு வாகனம். வியாச மகாமுனிவர் யார் தெரியுமா? பராசர முனிவரின் புதல்வர். வேதத்தைத் தொகுத்து உலகுக்குக் கொடுத்தவர். இப்போது நான் சொல்லப்போகும் அதிசயமான கதையை எனக்குச் சொன்னவர். மகாஞானி.

என்னைக் கண்டதும் வியாசர் "கணநாதரே! ரொம்ப அழகான கதை ஒன்றை-உண்மைக்கதை—நான் உருவாக்கி இருக்கிறேன். இதை எழுதுகிறவர்கள் பூமியில் இல்லை. அதற்குத்தகுந்த ஆள் நீர்தான்" என்று சொன்னுர்.

உடனே நான் "ப்பூ இவ்வளவுதானே! பிரமாதம் நான் எழுதுகிறேன். ஆனுல் ஒரு நிபந்தனை. நான் எழுதும் போது நிறுத்தவேமாட்டேன். கொஞ்சநேரம்கூட நிறுத்தாமல் நீங்கள் சொல்லிக்கொண்டேபோகவேண்டும். அப்படியானுல்தான் நான் எழுதுவேன்" என்றேன், விளையாட்டாக

என் நிபந்தனையை ஒப்புக்கொண்ட அவரும் எனக்கு ஒரு கடுமையான நிபந்தனையைப்போட்டார் "நான் சொல்லும் சுலோகங்களின் பொருளை அறிந்துகொண்டு நீ எழுதிக்கொண்டே போகவேண்டும். சந்தேகம் கேட்கக் கூடாது!"

அந்தக்காலத்தில் ஒரு பென்ஸில் உண்டா! என் ஒரு வெள்ளைக்காகிதான் ஏது! இப்போ ஆயிரக் கணக்கான பக்கங்கள் கொண்ட லக்ஷக்கணக்கான புத்தகங்களை சில மணிநேரத்தில் அச்சடித்துக் குவித்து விடுகிறீர்கள். அப்போதெல்லாம் பனை ஓலைகள்தான் காகிதம். அதற்கும் முன்னுல் பாறைகள்தான் காகிதமாகப் பயன் பட்டன. புத்தகம் ஏது? பிறர் சொல்லக்கேட்டுப்பல விஷயங்களையும் அறிந்து வளர்த்து வந்தனர். ம்...அது ஒரு காலம் அந்தக் கதை எல்லாம் இப்போது எதற்கு? போகட்டும்!

வியாசர் வேண்டுகோளின்படி நாலைந்து எழுத்தாணிகளுடனும் கட்டுக் கட்டாக ஓலைச்சுவடிகளுடனும் அவர் சொல்லப்போவதை எழுத உட்கார்ந்தேன். எங்க அம்மா கதை சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்த மாமாவும் அப்படித்தான் சொல்லுவார்; நாம் ஜம்முனு எழுதி விடலாம் என்று நினைத்தேன். ஆனுல் அவர் என்னுலேயே புரிந்துகொள்ள முடியாதபடி சில பாடல்களைச் சொல்லி விடுவார். நான் அதன் பொருளை ஆராய்ந்து கொண்டிருப்பதற்குள் அவர் பல பாடல்களை மனதிற்குள் கவனம் செய்துகொண்டு வெகுவேகமாகச் சொல்லிக்கொண்டே போய்விடுவார். கடலலைகள்போல அவர் வாக்கிலிருந்து கதைகள் உருண்டுவந்தன. வேக வேகமாகச் சொல்லிக் கொண்டுபோனுர். கதைக்குக்கதை. அந்தக் கதைக்குள் ஒரு குட்டிக்கதை! இப்படிச் சொல்லி என்னைத் திக்கு முக்காட வைத்துவிட்டார். அவ்வளவும் அவருக்கு எப்படித்தான் ஞாபகம் இருந்ததோ! நான் திணறிப்போனேன். என்னுல் அவர் வேகத்தைச் சமாளிக்க முடியவில்லை!

அட்டடே மணி 000 ஆகிவிட்டதே-ரொம்பப் பேசிவிட்டேன். அடுத்த புரோகிறம்காரர்கள் காத்திருக்கிறர்கள், ஆசீர்வாதம், நான் பிறகு சந்திக்கிறேன்!

திப் புதையலை மீட்டுவர அரசால் அனுப்பப்படுகிருன்,

. வழியில் ஜிம்மி என்ற பையனையும் சேர்த்துக்கொண்டு 2 குறிகளைக் கண்டு பிடித்து விடுகிருன்.]

'பூட்ஸ்' அடியால் அந்த ஆள் திகைத்து தடுமாறிக் கொண்டிருக்கும்போதே நான் குபீர் என்று அவன்மேல் பாய்ந்து கீழே தள்ளிவிட்டு குதிரையின் மேல் ஏறிக்கொண்டேன். ஜிம்மியும் என் பின்னுல் தாவி ஏறினுன். அந்த மனிதன் கத்தக்கத்த நாங்கள் குதிரையை வேகமாகத் தட்டிவிட்டோம். (தொடரும்)

28



குதிரை கிடைத்தது!

பிராணி உலகம்

நாய்கள்



எஸ்கிமோ நாய்கள்

அம்பி இந்த உலகில் எவ்வளவோ மிருகங்கள் இருக்கின்றன. பெரியது, சிறியது, சில பழக்கக்கூடியது, சில பழக்க முடியாதது, சில நமக்கு ரொம்ப கஷ்டத்தைக் கொடுக்கும். பல நமக்குப்பல வகைகளில் நன்மை தருகிறது அனேக மிருகங்கள் அறிவு உடையவை. ஆனுல் நாயைப்போல மனிதனுக்கு நண்பனுக வேறு எதுவுமே ஆக முடியாது. நாய் மனிதனின் குடும்பத்தில் ஒரு கூட்டாளியாகக் கூட ஆகிவிட்டது. மேல் நாடுகளில், நாய்களில் கணக்கிடமுடியாத வகை இருக்கிறது. ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு விதத்தில் பேர்போனவை. சில வேட்டையாடுவதில் சூரன். சில காவல் காப்பதில் கெட்டிக்காரன். சில ஆடு மேய்ப்பதில் அதி சமர்த்து. தங்கள் எஜமானனுக்காக நாய்கள், உயிரையே கொடுக்கும் நீரில் மூழ்கி இறக்கப்போகும் மனிதனைக்காப்பாற்றிய நாய் தங்கமெடல் பரிசு பெற்றதையும், யுத்தத்தில் செஞ்சிலுவையில் சேர்ந்து காயம்பட்ட போர்வீரர்களுக்கு உதவியளித்ததையும் பற்றி நீங்கள் படித்திருப்பீர்களே.

மிகுந்த புத்திசாலியான நாய் ஐரோப்பாவில் உள்ள ஸ்விஜ்ஜர்லாந்து தேசத்தைச்சேர்ந்த ஸெண்ட் பெர்னுர்ட் என்ற கம்பீரமான நாய்கள் பெருந்தன்மையான தோற்றமுடையன. பனிமலை பிரதேசங்களில் வழி தவறியோ களைத்தோ திண்டாடும் பிரயாணிகளைக் காப்பதில் மகாகெட்டிக்காரன் இந்த நாய். இதன் கழுத்தில் ஒரு ஒயின் புட்டி கட்டி விடப்பட்டிருக்கும். களைப்படைந்தவனிடம் இது போய் நின்று ஒயின் சப்ளை செய்யும். (Barry) என்ற ஒரு நாய் 40 மனிதர்களைக்காப்பாற்றி இருக்கிறதாம். கடைசியில் பிறருக்கு உதவி செய்வதிலேயே அது இறந்ததாம்.

நாய்களின் பயங்கரமான வகைகளில் எஸ்கிமோ நாய்களைச்சேர்க்கலாம். இவை குரைப்பதற்கு பதில் ஊளையிடும். ஒன்ருெடொன்று அடிக்கடி சண்டையிடும். எஸ்கிமோ நாய்களை பழக்கவே முடியாது. சமயம் கிடைக்கும்போதெல்லாம் எஜமானனை விட்டு ஓடிவிடும். ஓடிப்போய் ஓநாயுடன் சேர்ந்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விடும். ஆனுல் இவைகள் மிகுந்த அறிவுள்ளவை. உபயோகமுள்ளவை. எஸ்கிமோ ஜனங்களுக்கு இந்த நாய் இல்லையானுல் வாழ்க்கையே கிடையாது. ஸ்லெட்ஜ் என்ற வண்டியை இவைகள் தான் இழுக்கும். இந்த வண்டியில் எட்டு அல்லது பத்து நாய்கள் கட்டுவது வழக்கம். ஒவ்வொரு நாயும் வழக்கமாக தன்னைக் கட்டும் வரிசையிலிருந்து தவறிவிட்டால் சண்டையிட ஆரம்பித்துவிடும். பலமபொருந்திய எஸ்கிமோ நாய் தலைமை வகிக்கும் நாய்களைப்பற்றி எவ்வளவோ இருக்கிறது. சொல்லிக்கொண்டே போகலாம் தம்பி. ஆனுல் நேரமாகிறது. நாய் மனிதனின் நண்பன். அழகோடு கூடிய அறிவுள்ள பிராணி. மேல்நாட்டாருக்கு நாய்க்கண்காட்சிநடத்துவதில் ரொம்ப ஆனந்தம். நாய்களுக்கு அவர்கள் கொடுக்கும் மதிப்பே தனிதான் அம்பி. 'லாசி' என்ற நாயைக்கொண்டே அமெரிக்காவில் பிரமாதமான சினிமாப்படங்கள் எடுக்கிருர்கள்.



ஸேண்ட் பேர்னார்ட்



27

[முன் கதை: டாம்ஜிம்ஜாக் ஒரு பெரிய சூரன். மகாகெட்டிக்காரன். அந்த ஊர் அரசருக்குச் சேரவேண்டிய ஒரு பெரிய புதையலை ஒரு கொள்ளைக்காரன் அடித்துக்கொண்டு போய் ஒரு ரகசியமான இடத்தில் ஒளித்துவிடுகிறான்.

அவன் இறக்கும்போது அந்தப் புதையல் உள்ள இடத்திற்குப் போகும் வழியின் அடையாளங்களைத் தன் 6 பிள்ளைகளின் உடலிலும் 'பச்சை' குத்தி விட்டுப் போகிறான். டாம் ஜிம் ஜாக் அந்த ஆறு முரடர்களையும் கண்டு பிடித்

டாம் ஜிம் ஜாக்

சில வீரர்களின் உண்மைக்கதைகள் "கிட்டு"

கொலம்பஸும் புது உலகமும்

[கொலம்பஸ் இந்தியாவிற்குக் கடல் மார்க்கங்காணமிகுந்த கஷ்டப்பட்டு ஸ்பெயின் அரசியின் உதவிபெற்று பிரயாணத்தைத் துவக்குகிறார். கப்பல் மிதக்கிறது மாலுமிகள் பூமி மறைந்ததும் வருந்துகின்றனர்.]

மனம் சோர்ந்த மாலுமிகளுக்கு கொலம்பஸ் தைரியமூட்டினார். இந்தப் பிரயாணம் வெற்றிகரமாக முடிந்தால் அவர்களுக்குக் கிடைக்கப்போகும் பரிசுகளைப் பற்றிச் சொன்னார். கொலம்பஸ் இந்தியாவுக்குப் போகவேண்டிய வழி கிழக்குத். திசை ஆனால் அவரிடமுள்ள திசையறி கருவி மேற்கு திசையையே காட்டிக்கொண்டிருந்தது. இது கொலம்பஸிற்கு விளங்கவில்லை, காற்றும் புயலும் கப்பலை அலைக்கழித்தன. மாலுமிகளும், கப்பலிலுள்ளோரும் நம்பிக்கை இழந்து கலகம் செய்யலாயினர், ஆனால் கொலம்பஸ் தைரியமாக இருந்தார். மேகக் கூட்டங்களை பூமிஎன்று நம்பி அனேகதடவை ஏமாந்தார்கள். இப்படி நெடுநாள் கடலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது, ஒரு நாள் கொலம்பஸ், கடல் நீரில் செடி கொடிகளும், பாசியும், மாக் கிளைகளும் மிதந்து வருவதைக் கண்டு கப்பல் கரையை சமீபித்துவிட்டதை அறிந்து மாலுமிகளுக்கு உற்சாகமூட்டினார்.

அக்டோபர் 12-ந் தேதி அதிகாலையில் கொலம்பஸ் பெரிய பிரபுபோல அலங்கார உடை உடுத்திக்கொண்டு கரையில் இறங்கினார். தரையில் கால் ஊன்றியதும் கொலம்பஸ் முழந்தாளிட்டு கடவுளை மனதாரத் துதித்தார். கரை கண்டதும் கப்பலிலுள்ளோர் அடைந்த ஆனந்தத்துக்குக் கேட்கவாவேண்டும். குதித்தார்கள். ஒருவரோடு ஒருவர் கட்டிப் புரண்டார்கள். பூமியை முத்தமிட்டார்கள். கொலம்பஸை தூஷித்தவர்கள் இப்போது புகழ்ந்து பணிந்து அவரை 'வைஸ்ராய்' ஆக ஏற்றுக்கொண்டனர். அவர்கள் முதலில் இறங்கிய இடம் வாட்லிங் தீவு. கொலம்பஸ் "அதற்கு ஸான் ஸால்வடார்" என்று பெயரிட்டார் இந்தியாவுக்குக் கடல் வழி காணச் சென்றவர் ஒரு புது நாட்டைக் கண்டுபிடித்து விட்டார். ஆனால் அப்போது கொலம்பஸுக்கு அது தெரியவில்லை. அமெரிக்காவை இந்தியா என்றேதான் எண்ணினார்.

சிலநாள் கழித்து கொலம்பஸ் ஸ்பெயினுக்குத் திரும்பலானார். 'பஹாமா' வழியாக இப்போது கப்பலைச் செலுத்திக்கொண்டு போனார். அதை சைனாவின் கடற்கரை பாகம் என்று அவர் எண்ணினார். பிறகு கப்பல் தென் திசையை நோக்கிப் பயணமாயிற்று. வழியில் கொலம்பஸ் மற்றொரு பெரிய தீவைக் கண்டார் அதற்கு ஹிஸ்பானியோலா' என்று பெயரிட்டார். அதை இக்காலத்தில் 'ஹெய்டிதீவு' என்றழைக்கிறோம்.

இந்த சமயத்தில் கொலம்பஸின் கப்பல் ஒரு ஆபத்தில் சிக்கிக்கொண்டது. கப்பல் கடற்கரையில் போய் மோதி உடைந்துவிட்டது. அவரும் 'ஸாண்டாமரியா' கப்பலிலிருந்த ஆட்களும் 'நினா'வில் ஏற வேண்டியதாயிற்று. ஆனால் அந்தச் சிறு கப்பல் இரண்டு கப்பல் ஆள்களையும் சாமானையும் தங்கமுடியாது. ஆகையால் கொலம்பஸ் உடைந்த கப்பலின் மரங்களினால் ஒரு சிறு கோட்டை கட்டி அதில் 40 பேரை வைத்து சில பீரங்கி துப்பாக்கிகளையும் அவர்களின் உதவிக்கு வைத்துவிட்டு ஸ்பெயினை நோக்கிக் கிளம்பினார்.

ஆனால் ஆபத்து அவரை விடவில்லை. வழியில் 'நினா' 'பிண்டா' இரண்டு கப்பல்களும் பலமான புயல்காற்றில் சிக்கிக்கொண்டன.

வரும்போது பல கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு துணிவோடு வந்த கொலம்பஸே இந்தத்தடவை 'இனி பிழைக்க வழியில்லை என்று தீர்மானித்து தன் பிரயாணத்தின் குறிப்புகளை எழுதி ஒரு புட்டியில் அடைத்து அதைக் கடலில் மிதக்க விட்டுவிட்டு கப்பல் முழுகும் நேரத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தார்.

தொடர்கதை

வீரகேசரியின் பயங்கர யாத்திரை!

"மிருத்யு"

[முன் கதைச் சுருக்கம்]

ரொம்ப ரொம்ப காலத்துக்கு முன்னாலே தூமகேதுன்னு ஒரு ராஜா இருந்தார். அவருக்கு 'டும் டும்' அப்படின்னு ஒரு பிள்ளை. அவன் விசித்திரமான குணமுடையவன். வித விதமான சிலந்திப் பூச்சிகளைச் சேகரித்து வளர்ப்பது அவன் குணம். 'டும் டும்' சிம்மாசனமேறினார். அவருக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. அதற்கு 'மனோரமா' என்று பெயரிட்டுச் செல்லமாக வளர்த்து வந்தார். இப்போது 'டும் டும்' சிலந்திகளுக்குத் தனி அரண்மனையே அமைத்து புதப்புது சிலந்திகளைச் சேர்ப்பதிலேயே தன் நேரம் முழுவதையும் செலவிட்டார். ஒரு நாள் ஒரு கிழவர் வந்து சிலந்திகளுக்கு அரசனான ராஜா சிலந்தியைப்பற்றிப் பிரமாதமாகச் சொல்லிவிட்டுப் போகவே 'டும் டும்' அந்த அற்புத ராஜாச் சிலந்தியைக் கொண்டு வருபவர்களுக்குத் தன் பெண் மனோரமாவைக் கல்யாணம் செய்து தருவதாக அறிவிக்கிறார். மனோரமா உலாவப்போன ஒரு நாள் ஊருக்கு வெளியே ஒரு அழகிய வாலிபன் எறும்புகளோடு பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அவனே சிலந்தியைக் கொண்டுவரத் தகுதியானவன் என்று எண்ணி அவனிடம் 'டும் டும்' அரசரின் அறிவிப்பைச் சொல்லுகிறாள். அப்போது தன்னை 'டும் டும்' அரசரின் மகள் 'மனோரமா' என்று சொல்லிக்கொள்ளாமல் தான் யாரோ என்றும் தன் பெயர் 'மாயக்கன்னி' என்றும் சொல்லிச் செல்கிறாள். அந்த வாலிபன்—வீரகேசரி—அந்த மாயக்கன்னியின் மேல் காதல் கொண்டு அவள் விருப்பப்படியே 'டும் டும்' ராஜாவிற்காக சிலந்தியைத் தேடக் கிளம்புகிறான். வீரகேசரி பல கஷ்டங்களை அனுபவித்து ஒரு மர்மக் கிழவனின் உதவி கொண்டு அவனிடமுள்ள மாயக் கப்பலில் சிலந்தித் தீவை அடைந்து சிலந்தி அரசனைப் பிடித்துச் சிமிழில் அடைத்து விடுகிறான். அப்போது அந்த சிலந்தி வீரகேசரியைக் கடிக்கவே அதனால் மயக்கமடைந்து கீழே விழ மர்மக் கிழவன் அவனைக் காப்பாற்றி புல் தரையில் படுக்க வைத்துவிட்டு மறைந்து விடுகிறான். வீரகேசரி கண் விழித்துப் பார்க்கும்போது சிமிழ் காணப்படவில்லை. அதைத் தேடிக்கொண்டு காட்டில் அலையும்போது, மகேந்திரபுரத்து இளவரசன் காளிங்கன், இளவரசி நிர்மலாவைத்தேடிக்கொண்டு அதேகாட்டிற்கு வந்து அங்கு ஒரு சிங்கத்தினிடம் சிக்கிக்கொள்ளவே, வீரகேசரி, மிருகங்களுடன் பேசக்கூடிய தன்னுடைய சக்தியினால் சிங்கத்தை விரட்டி விட்டுக் காளிங்கனைக் காப்பாற்றி தன் நண்பனாக்கிக் கொள்கிறான்.

இருவரும் தங்கள் தங்கள் பொருள்களைத் தேடிக்கொண்டு ஒரு ஊரை அடைய அங்கு அரசாண்டு கொண்டிருக்கும் மேகவர்மனால் வரவேற்கப்படுகிறார்கள். மேகவர்மனின் தம்பி விக்ரமன் ஒரு கொடியவன். அண்ணனைக் கொன்றுவிட்டு நாட்டைத் தானே ஆள ஆசை கொண்டிருக்கும் அவன் வீரகேசரியையும் காளிங்கனையும் கண்டதும் திகைத்துக் குழப்பமடைகிறான்

இனி மேலே படியுங்கள் !

4. வைர வியாரி

ஒரு நாள் மேகவர்மனுடன் வீரகேசரியும் காளிங்கனும் அரண்மனையின் வஸந்த மண்டபத்தில் ஆனந்தமாகப் பேசிக்கொண்டிருந்தனர். எதிரே பலவிதமான பழவர்க்கங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பழங்களைச் சுவைத்துக்கொண்டு வீரகேசரி தான் வழியில் பார்த்த தேசங்களிலுள்ள விசேஷங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு தூதன் உள்ளே நுழைந்து அரசே "வெகுதூரத்திலிருந்து யாரோ ஒரு ரத்ன வியாபாரி வந்திருக்கிறான். தங்களை உடனே பார்க்கவேண்டுமாம்" என்றான் தலை வணங்கி.

மேகவர்மர் அவனை உள்ளே அனுப்பும்படி உத்திரவிட்டார். சிறிது நேரத்தில் ஒரு மனிதன் உள்ளே நுழைந்தான். பெரிய முண்டாசு! புழுதி படிந்த உடை முறுக்கி விட்ட மீசை. தோளிலே வேலைப்பாடமைந்த் ஒரு தந்தப் பெட்டி! பெட்டியை அரசர் முன்வைத்துத் திறந்தான்வியாபாரி. அதிலிருந்த ரத்னங்களும் மாணிக்கக் கற்களும் முத்துக்களும் கண்ணைப் பறிப்பதாய் இருந்தன. அவைகளின் அழகில் மயங்கிய அரசரும் தன் மனைவிக்கு ஒரு ரத்னமாலை வாங்கினார். வீரகேசரியும் காளிங்கனும் இரண்டு பிரகாசமான மோதிரங்களை வாங்கிக்கொண்டனர். வியாபாரி மூட்டை கட்டும்போது அவன் பெட்டியில் ஓரத்தில் இருந்த ஒரு சிறு தங்கச் சிமிழ் வீரகேசரியின் கண்களில் பட்டது. அதை மேகவர்மரிடம் சொல்லவே, "ஐயா! அதோ அந்தச் சிமிழில் என்ன இருக்கிறது எங்களுக்குக் காண்பிக்காமலேயே மூடி வைக்கிறீரே" என்று கேட்டார்.

வியாபாரி அந்தச் சிமிழை எடுத்துத் துடைத்து அதன் பெருமையைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

(தொடரும்)

மாய மருந்து

"கீர்த்தி"

கமலாவின் நாடகம்!

கமலா ரொம்ப அழகான பெண். பத்து வயது தான் அவளுக்கு. வகுப்பில் அவள்தான் முதல். வாத்தியாரெல்லாம் அவளிடம் அன்பாக நடந்து கொள்ளுவார்கள். கமலா தன் தாத்தா வீட்டில் வளர்ந்து வந்தாள். அவள் தாத்தா ஒரு டாக்டர். ரொம்ப வயதாகிவிட்டதால் முன்போல ஓடியாடி சம்பாதிப்பதில்லை. ஆனால் யாராவது உடம்பு சரியில்லை என்று வந்து கெஞ்சினால் மருந்து கொடுப்பார். நிறைய சொத்திருந்தது. கமலாவை செல்லமாக வளர்த்துவந்தார் தாத்தா. வயதாகிவிட்டதால் வேலை செய்யாதிருக்கவில்லை. சதா தன்னுடைய வைத்திய அறையில் ஏதாவது மருந்துகளைக் கலக்கிப் பரிசோதனை செய்துகொண்டே இருப்பார். கமலா தாத்தாவேலை செய்யும்போது அனேகமாக அருகில்தான் இருப்பாள். தாத்தா பல மருந்துகளைக் கலக்கும்போது கண்ணாடிக் குழாயில் வித விதமான வர்ணங்களுடன் மருந்து ஆவி விட்டுக் கொதிக்கும், பொங்கும், எரியும். இந்த அர்புதங்களை எல்லாம் பார்ப்பதில் அவளுக்கு ரொம்ப ஆசை.

மாணவிகளை எல்லாம் கமலாவின் வாத்தியார் ஒன்று சேர்த்து பள்ளிக்கூடக் கட்டிட நிதிக்காக 'டிராமா' ஒன்று போடத் தீர்மானித்திருந்தார். அந்த டிராமாவில் கமலாவிற்குத்தான் கதாநாயகி வேஷம். ஏனென்றால் அவள் தான் பள்ளிக்கூடத்திலேயே அழகி. அதோடு நன்றாக நடிக்கவும் அவளுக்குத் தான் தெரியும். அன்று கமலா தன் பாகத்துக்கான வசனங்களைப் படித்துக்கொண்டிருக்கும் போது. தாத்தாவின் அறையிலிருந்து பயங்கரமான சிரிப்புக் குரல் கேட்டது. அது போன்ற குரலை அவள் அதுவரை கேட்டதே இல்லை. கட்டையான முரட்டுக் குரலின் சிரிப்பு.

கமலா உடனே உள்ளே ஓடினாள். தாத்தா தான் அந்த அறையில் இருந்தார். வேறு யாருமில்லை. அவர் பல கண்ணாடிக் குழாய்களில் வித விதமான வர்ணமுள்ள திராவகங்களைக் கலந்து கொண்டிருந்தார். ஒவ்வொன்றும் புகை விட்டுப் பொங்கிக்கொண்டிருந்தன.

"என்ன தாத்தா இது. இப்போ இங்க யாரு சிரித்தது" என்றாள் கமலா!

"கமலா! வா ஒரு வேடிக்கை. நான்தான் சிரித்தேன். ஓடிவா இதோ பாரு. நான் புதிசா ஒரு மருந்து கண்டுபிடித்திருக்கிறேன். அது மனிதர்களின் குரலையே மாற்றிவிடும். இதோ பாரேன். இதைச் சாப்பிடு... ஆனால் இது ரொம்பக் காரமாக இருக்கும். உன்னால் சாப்பிட முடியாது. இரு இரு. இதோ இந்த சாக்லட்டை இந்த திராவகத்தில் இரண்டு நிமிஷம் ஊறப்போட்டு வைக்கிறேன். பிறகு அந்தச் சாக்லட்டை எடுத்துச் சாப்பிட்டாயானால் உன் குரலே மாறிவிடும்" என்று சொல்லிக் கொண்டே இரண்டு சாக்லட்டுகளை குழாயிலுள்ள சிவப்பு திராவகத்தில் மிதக்கவிட்டார். கமலாவினால் அவள் காதுகளை நம்பவே முடியவில்லை. தாத்தாவின் குரலா அது! எவ்வளவு விகாரமாக, பயங்காமாக இருந்தது அது. ஐயோ!

"வேண்டாம் தாத்தா. தாத்தா தாத்தா! உன் குரலைக் கேட்கவே எனக்குப் பிடிக்கவில்லை" என்று கத்தினாள் கமலா. ஆனால் தாத்தா சிரித்தார். அது இன்னும் விகாரமாக இருந்தது. "கமலா பயப்படாதே! பழைய குரலைக் கொண்டுவரவும் மருந்து கண்டுபிடித்து விட்டேன். இதைச் சாப்பிடேன்" என்று சொல்லி சாக்லட்டுகளைக் கொடுத்தார். கமலாவும் நடுக்கத்துடன் சாக்லட்டுகளை விழுங்கினாள் என்ன ஆச்சரியம். மறு நிமிஷம் அவள் 'தாத்தா' என்று கூப்பிட்டாள். அந்தக் குரல்! டக்கென்று வாயை மூடிக்கொண்டாள் கமலா. முரட்டு ஆண்பிள்ளையின் குரல்போல இருந்தது அது. கமலாவிற்குப் பேசவே பிடிக்கவில்லை. மெதுவாக 'தாத்தா...எனக்கு என் பழைய குரலையே கொடுத்துவிடுங்கள்' என்று வாயை மூடிக் கொண்டு பயந்து பயந்து மெதுவாகத்தான் சொன்னாள். ஆனால் நாழியாக ஆக குரல் கட்டையாக விகாரமாக மாறியது. உடனே தாத்தா வெள்ளை திராவகத்தில் மிதந்து கொண்டிருந்த ஒரு சாக்லட்டை எடுத்துக் கொடுக்கவே, கமலா அதை விழுங்கினாள். அப்பாடா! அவள் குரல் அவளுக்கு வந்துவிட்டது. பிறகு வெகுநேரம் வரை தாத்தாவும் பேத்தியும் அந்த அற்புத மருந்தின் குணத்தைப் பற்றி வியந்துகொண்டிருந்தனர்.

அன்று மாலை. கமலாவின் சிநேகிதி விமலா ஓடோடி வந்தாள். "அடி கமலா! நம்ம டிராமா ஞாயிற்றுக்கிழமை நடத்த முடியாது போலிருக்கே. கலக்டர்பெண் கோமதியைத் தெரியாது. அவ அன்னிக்கு கொட்டகையிலே பாட்டுக்கச்சேரி அரங்கேற்றப் போறாளாம். இதோ பாரு நோட்டீஸ் கூடப் போட்டிருக்கா" என்று காண்பித்தாள்.

கமலாவிற்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர்கள் டிராமா ஞாயிற்றுக்கிழமை நடந்துதான் ஆகவேண்டும். பிறகு என்றால் பள்ளிக்கூடம் விடுமுறை மாணவர்கள் எல்லாம் ஊருக்குப் போய்விடுவார்கள்.

"நாம் கோமதியிடம் போய் சொல்லி கச்சேரியைத் தள்ளிப் போட்டுக்கொள்ளச் சொன்னால்" என்றாள் கமலா!

'யார் கோமதியா.' அவளைத் தெரியாதா. உனக்கு அவ மகா கெர்வின்னா! சுத்த அகம்பாவக்காரி முன்புகூட நம்ம பள்ளிக்கூடத்திலே படித்திருக்கிறாள். எனக்கென்னமோ நம்பிக்கை இல்லை" என்றாள் விமலா. இருவரும் வாத்தியாரிடம் சென்றார்கள். அவரும் கலெக்டர் பெண்ணின் கச்சேரியை தள்ளி வைக்க வழி தெரியாமல் திகைத்தார். வெகுநாளாகக் கஷ்டப்பட்டு ஒத்திகைகள் நடத்தி அந்த ஞாயிற்றுக்கிழமை நாடகம் நடத்துவதாகத் தீர்மானித்திருந்தனர். அந்த ஊரில் அது ஒரே கொட்டகைதான். வேறு இடமே கிடையாது. அந்த ஞாயிற்றுக்கிழமை டிராமா நடத்தாவிடில் பிறகு நடத்தவே முடியாது. வசூலும் ஆகாது.

கமலா கடைசியில் கோமதியைப் பார்ப்பதென்றே தீர்மானித்துவிட்டாள். விமலாவும் கமலாவும் கோமதியின் வீட்டை அடைந்தனர். பிடில் வாசித்துக்கொண்டே இவர்களை அலட்சியமாக வரவேற்றாள் கோமதி. அவளுக்கு தான் தான் அழகாகப் பாடுகிறோம்; தன்னுடைய கச்சேரி இன்று நடக்கப் போகிறது, தான் கலெக்டர் பெண், தன் கச்சேரியைக் கேட்க நிறைய கூட்டம் வரும் என்றெல்லாம் அவளுக்குக் கர்வம்.

கமலா தாங்கள் கஷ்டப்பட்டு தயாரித்திருக்கும் டிராமாவைப்பற்றிச் சொன்னாள். கோமதி அலட்சியமாக "ஏன் சனிக்கிழமையே போடுங்களேன். இல்லாவிட்டால் திங்கட்கிழமை இருக்கிறதே! உங்கள் வேடிக்கை டிராமாவிற்காக என் கச்சேரியை மாற்ற முடியாது" என்றாள். கமலாவிற்குக் கோபம் தாங்கவில்லை. விமலா பிடித்து இழுத்து வாராதிருந்தால் அவள் கோமதியை அடித்திருப்பாள்.

வருத்தத்தோடு வந்துகொண்டிருந்த கமலாவின் காதில் தூரத்தில் யாரோ கலகலவென்று சிரிப்பது கேட்டது. சட்டென்று அவளுக்கு முதல்நாள் தாத்தா தயாரித்த மருந்தின் ஞாபகம் வந்தது. அவ்வளவுதான் ஒரு குதி குதித்தாள்.

கலெக்டர் பெண் பாட்டென்றால் கேட்க வேண்டுமா? கலெக்டர் அழைப்பிற்கிணங்க பலபெரிய மனிதர்கள் எங்கெங்கிருந்தெல்லாமோ வந்திருந்தார்கள். ஏகக்கூட்டம். கச்சேரி ஆரம்பமாவதற்கு முன்னால் கோமதியிடம் அழகாக உடையணிந்த ஒரு பையன் வந்து ஒரு பொட்டலத்தை நீட்டினான். அதில் "தங்கள் புகழை விரும்பும் நண்பரின் அன்பளிப்பு." என்று எழுதி இருந்தது. உள்ளே பளபளப்பான காகிதங்களில் பெரிய பெரிய சாக்லட்டுகள் இருந்தன. அதைக்கண்டதும் கோமதிக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று அதோடு அந்தக் காகிதத்தில். குறிப்பு:— இது தொண்டைக்கு நல்லது குரலை இனிமையாக்கும். என்று வேறு போட்டிருந்ததால். கோமதி 2, 3, சாக்லட்டுகளை அலட்சியமாக விழுங்கினாள். அதற்குள் கச்சேரிக்கு நேரமாகிவிடவே மேடைக்குப் போனாள். வர்ண விளக்குகளில் அவள் ஜரிகைஉடை 'டால்' அடிக்க "ஸ...அ...அ " என்று முதல் பாட்டுக்கு ராகம் இழுத்தாள். ஐயோ! என்ன இது கழுதை கத்துவதுபோல இருந்தது. சபையே ஸ்தம்பித்து விட்டது. கோமதிக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது. நன்றாகக் கனைத்துக்கொண்டு மீச்சுத் தொண்டையில் பயந்தபடி பாட ஆரம்பித்தாள். முன்னைவிடப் பயங்கரமான கட்டைக் குரல்! பத்துக்கழுதை சேர்ந்து கத்தினால் எப்படியோ அப்படி இருந்தது. கோமதிக்கு வெட்கமும் அவமானமும் தாங்கவில்லை. மேடையைவிட்டு ஓடியேபோய் விட்டாள்.

இவ்வளவையும் எதிர்பார்த்துக்கொண்டு மூலையில் சிரிப்பை அடக்கிக்கொண்டு நின்றிருந்த கமலா: மேடைமீது தாவி ஏறி குழப்பமடைந்துள்ள கூட்டத்தைப்பார்த்து "மகாஜனங்களே, ஏதோ எதிர்பாராதவிதமாக கோமதி அம்மாளின் குரலில் ஏதோ கெடுதல் ஏற்பட்டு விட்டதால் ஏமாற்ற மடைந்த தங்களுக்கு நாடகவிருந்தளிக்கத் தீர்மானித்துள்ளோம். தயவு செய்து எல்லோரும் அமைதியுடன் அவரவர்கள் இடத்திலேயே உட்கார்ந்திருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன் "என்று சொல்லி திரையைத் தூக்கினாள். தயாராக இருந்த வாத்தியார் நாடகத்தை கணகணவென்று மணிமுழக்கத்தோடு ஆரம்பித்துவைத்தார் கச்சேரிக்கு வந்திருந்த கூட்டத்தோடு நாடகத்திற்குவேறு கூட்டம் சேர்ந்தது. நிதி வசூலைப் பற்றிச் சொல்லவாவேண்டும்! நாடகத்தைப்பற்றி, அதுவும் மூக்யமாக கமலாவின் நடிப்பை எல்லாரும் புகழ்ந்தார்கள்.

மறுநாள் கமலா தன்தாத்தாவிடம் விஷயத்தை விளக்கி வெள்ளை திராவகத்தில் ஊறப்போட்ட சாக்லட்டுடன் கலெக்டரின் வீட்டிற்கு, கோமதிக்கு வைத்யம் செய்ய, தாத்தாவை அனுப்பிவைத்தாள் கமலா!

சென்னை வரிபூத பட்ஜெட்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பி ஹோட்டல்வரி நேரடியாகப் பொதுஜனத்தைபாதிக்காதெனினும் மொத்தத்தில் அரையணு வரி முதலாளிக்கு ஏற்பட்டால் கப் ஒன்றுக்கு அரையணுவாகக் காப்பி விலை ஏறும் என்பதை அனுபவப்பட்டவர்கள் மறக்க மாட்டார்கள்! மின்சார வரியும், பஸ்கட்டண வரியும் அவ்வளவு கொடுமையானதல்லவெனினும், துன்பம் கொடுப்பவைதான் என்பதை மறுக்க முடியாது.

நகர ஸ்தாவர சொத்துகள் மதிப்புயர்வு சம்பந்தமான தண்டல் சென்னை நிதி மந்திரிக்கே தனியுரிமையான ஒரு "பொருளாதாரத் தமாஷா"

முதல் விஷயம் இந்த பட்ஜெட் அறிவிப்பு வந்த தினத்திலேயே ஸ்தாவர சொத்துக்களின் மதிப்பு உட்கார்ந்துபோயிருக்கும், அல்லது விரைவில் உட்கார்ந்துவிடும். இன்றைய பொருளாதார நிலையில் இது பயங்கரமான இடிப்பொடியாகும் என்பதில் சந்தேகமில்லை. அப்புறம் இந்த வரியால் என்ன வருமானம் சேர்ந்துவிடப் போகிறது அரசாங்கத்துக்கு?

மேலும் 1938-ம் வருடத்து மதிப்புகளை நிர்ணயிப்பது காரிய சாத்தியமானவிஷயமல்ல. தவிர, இன்று ரொம்ப உயர்வான மதிப்புகளும் இருப்பதாகக் கூறமுடியாது—ஏதோ ஒரு நிலைக்கு வந்து நிலைத்துவிட்டது இந்த மதிப்பு.

தவிரவும் இந்த மதிப்புயர்வினுல் 'லாபமடைந்தவர்கள்' ரொம்ப ரொம்ப சொல்பமாகத்தான் இருப்பார்கள். கொள்ளை லாபத்தின் மூலம் சேகரித்த பணத்தை ஸ்தாவர சொத்துக்களில் முடக்கியவர் விஷயத்தில் இந்த வரிக்கு நியாயம் சிறிது இருக்கலாம். ஆனுல் உழைத்து சம்பாதித்துச் சிறு சார்பு தேடியிருக்கும் மத்திய, கீழ் வகுப்பினருக்கு இந்த வரி கொடுமைதான் விளைக்கும்.

நமது மகாணத்தில் நகரசபைகளும், பஞ்சாயத்து போர்டுகளும் நடந்துவரும் லட்சணம் சென்னையில் உட்கார்ந்துகொண்டு அரசாங்கச் செலவில்—அதாவது பொதுஜனச்செலவில்—டின்னர் சாப்பிட்டுவருபவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம்; ஆனுல் நேரே அனுபவிக்கும் மக்களுக்கு நன்ருகத் தெரியும்.

நகரசபைகள் நகரவாசிகளுக்கு விதிக்கும் வரிகளும், இந்த வரிப்பணத்தைச் செலவிடும் முறையும், இடையில் நடந்துவரும் அக்கிரம 'வியாபாரங்களும்', நகரங்கள் இருக்கும் லட்சணமும், நிர்வாகத் திறனும் சொல்லத் தரமன்று. வரியைக் கொடுத்துவிட்டுப் புழுதி படிந்த பொய்-ரஸ்தாக்களிலும், சாக்கடை நாற்றத்திலும் உலவிவரும் மக்களைக் கேட்டால் விஷயம் நன்ருக விளங்கும்.

இந்த நிலையில் ஏற்கனவே அதிகமான-எது பலனும் திருப்பிக் கொடுக்காத-வரிகளை நகர சபைகளுக்கு அழுதுவரும் நகர மக்கள் இந்தப் புதிய வீட்டு வரி உபரியைக் கண்டு "சொக்கி"த் தான் போய்விடுவார்கள்!

பத்திரிகைகள்

பத்திரிகைகளின் மேல் விதிக்கப்பட்டுள்ள வரிகள் விநோதமானவை. ஏற்கனவேயே விற்பனை வரி ஒருபுறமிருக்க, விளம்பர வரி வேறு சேரப்போகிறதாம்.

சென்னை மாகாணத்தில் லாபம் சம்பாதிக்கும் பத்திரிகைகள் ரொம்பக் குறைவு. இவற்றிலும் விற்பனை மூலம் லாபம் சம்பாதிப்பவை ரொம்பக் குறைவு. இவற்றில் பெரும் பகுதி விளம்பரங்களையே நம்பி வாழ்ந்து வருகின்றனவென்பது பகிரங்க ரகசியம்.

நல்ல விற்பனையுள்ள பத்திரிகைகள் (பெரும்பாலும் தினசரிகளே) விற்பனை-விளம்பரம் என்ற இருமுனை வரி விதிப்பால் சங்கடமடையும்.

மேலும் விளம்பர "லாபங்களைக்" கணக்குச் செய்வதில் இருக்கும் தொல்லை, இதனுல் பத்திரிகைகளுக்கு ஏற்படும் கவைக்குதவாதசங்கடம், பத்திரிரிகைகளின் பொருளாதார நிலை இவற்றைப் பார்க்குப்போது இந்த வரி விதிப்பால் வெறும் தொந்தரவு தவிர லாபம் எதும் இல்லை என்று விளக்கத் தேவையில்லை.

நல்ல அம்சங்கள்

இவ்வளவு கொடுமைகளுக்கிடையிலும் இந்த சென்னை பட்ஜெட்டில் ஓரிரு நல்ல அம்சங்கள் இல்லாமல் போகவில்லை என்பதைக் காணும்போது நமக்குக் குளிர்ச்சி ஏற்படுகிறது.

நல்ல வேளையாக, மத்திய அரசாங்கம் சிபாரிசு செய்தது போல் விவசாய வருமான வரி வேறு விதிக்காமல் விட்டுவிட்டது வரவேற்கத்தக்கது.

மேலும் இந்த வரி விதிப்பு 1949-50 என்ற இந்த ஒரு வருஷத்துக்கான ஆபத்துக்காலச் செய்கைதான் என்று கூறப்படுவது சற்று நிம்மதியளிக்கலாம். ஆனுலும் இந்த வாக்குத் தத்தம் நிறைவேற்றப்படுமோ என்பது, முந்தைய அனுபவத்திலிருந்து சந்தேகத்துக்குரிய விஷயமாகவே இருக்கிறது! இந்த வரி விதிப்பு நீடிக்காமல் இருந்தால் அதுவே நமக்கு ஆச்சரியம் விளைவிக்கும்!

முடிவு

எனவே சென்னை நிதி மந்திரியாரின் புது வருஷ பட்ஜெட்

(அடுத்த பக்கம் பார்க்க)

திருச்சி

வெலிங்டன் டாக்கீஸில்

வெற்றிகரமான 8-வது வாரம்

ஆதித்தன் கனவு

-(தமிழ் படம்)-



T. R. மஹாலிங்கம், அஞ்சலிதேவி

முதலியோர் நடித்தது

திருச்சி ராக்ஸி டாக்கீஸில்

இணையற்ற 2-வது வாரம்

பக்ஷிராஜாவின்

ஆர்யமாலா

(தமிழ் படம்)

P. U. சின்னப்பா, சரோஜினி நடித்தது



"மூர்த்தி"

இந்த இதழைப் புரட்டுவதற்கு முன்னுலே பல ரசிகர்கள் **வேலைக்காரி**யைப் பார்த்திருக்கலாம். ஜுபிடரின் வேலைக்காரி சென்றமாதம் 25-ந்தேதி பல நகரங்களில் காட்சி அளிக்கக் கிளம்பிவிட்ட விஷயம் புதிதல்ல. நட்சத்திர நடிகர்கள் நடிக்கும் இப் படத்தின் வெற்றியைப் பற்றி நாம் ஜோசியம் சொல்லுவானேன்!

நல்லதம்பி, மதுவிலக்கு, கிராமச் சீர்திருத்தம் போன்ற சுவையான விஷயங்களில் சக்கை போடு போட்டுக்கொண்டிருக்கிறுனும். இதில் பானுமதியின் நடிப்பு போற்றத்தக்கபடி அமைந்திருக்கிறதாம். கிந்தனுர் காலக்ஷேபம் ஒரு தனி அம்சம் என்றும் சொல்லப்படுகிறது.

ஜெமினியில் ஒளவையாரை கொத்தமங்கலம் சுப்பு பக்குவமாகக் கவனித்து வருகிறுர். கே. பி. சுந்தரம்பாள் தோன்றும் காட்சிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டதாம். ஜெமினியின் ஒளவையார் பலவிதங்களிலும் சிறந்து விளங்குவாள் என்று எதிர் பார்க்கலாம்.

'பிரபல ஆங்கிலக் கதையான' 'கார்லிகன்சகோதரர்கள்' என்ற நாவலை **காந்திமதி** என்ற பெயரில் உருவாக்கப்போவதாகத் தெரிகிறது சந்திரலேகாவின் மூலம் அடைந்த வெற்றி இதற்குப் பயன்படும். அற்புதமான கதை. அதை படமாக்க ஜெமினியால்தான முடியும்.

மதுரைவீரனை ஜெமினி வளர்க்கப்போவதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. பலரிடம் வேட்டைக்கு அகப்பட்டுள்ள இந்தவீரன் யாரால் சுடப்படப் போகிருனே!

முருகன்டாக்கீஸாரின் **'ரத்னகுமார்'** அதிவேகமாக வளர்ந்துகொண்டு வருகிறதாம். சின்னப்பா, பானுமதியுடன் கிருஷ்ணன் மதுரமும் இப்போது சேர்க்கப்பட்டிருக்கின்றனர்

சக்ரதாரியின் புகழுக்கு ஓரளவு பாத்திரமாகி இருக்கும் டைரக்டர் கோபால கிருஷ்ணன் அவர்களினுல் **பாரிஜாதம்** என்ற படம் வளர்க்கப்பட்டுவருகிறதாம். டி. ஆர். மகாலிங்கம் நடிக்கும் இப் படத்திற்கு கம்பதாசன் பாட்டாம்.

மகாலிங்கம், அஞ்சலிதேவி சாந்தகுமாரி, கே. சாரங்கபாணி முதலியோர் **தூக்குத் தூக்கியின்** வளர்ச்சியில் பங்கு பெற்றிருப்பவர். ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் துரிதமாக படப்பிடிப்பு ஆரம்பமாகப் போகிறது.

ஆங்கிலத்தில் 'ஸீரியல்' என்றொருவகைப் படங்கள். பெரியகதை அதை இரண்டு பாகங்களாகப் போட்டுக் காண்பிப்பார்கள். ஆனுல் தமிழ் நாட்டில் சாதாரணபடமே ஸீரியல்போலத்தான் காட்சி அளிக்கிறது. ஆனுல் அந்த ஸீரியல் குறையையும் ஜுபிடரின் **கிருஷ்ண விஜயம்** தீர்த்துவிடுமென்று தெரிகிறது. 'கிருஷ்ண விஜயம் 26,000 அடிகளுக்கு மேல் எடுக்கப்பட்டிருப்பதால் அது இரண்டு பெரும் பாகமாய் திரையிடப் படலாம்' என்று ஒரு அறிக்கை கூறுகிறது.


டில்லியில், திருச்சி எப். ஜி. நடேசய்யரும் நிருத்ய சாம்ராட் கோபாலகிருஷ்ணுவும்.

மங்கம்மாசபதத்தை முதலில் இந்தியால் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிருராம் ஸ்ரீ வாஸன் அவர்கள். மங்கம்மாவாக நடிக்க **பானுமதி** அமர்த்தப் படலாமென்று தெரிகிறது.

ராயல் டாக்கீஸாரின் **சுதர்சன்** தமிழ் வருஷப் பிறப்பன்று பவனி கிளம்புவார் என்றுதெரிகிறது. சின்னப்பா, கண்ணும்பா, யோக மங்களம் தோன்றும் இப் படம் ஜெமினி சக்ரதாரியின் கதையே தான். சுதர்சனுக்குச் சகல விதங்களிலும் வெற்றி கிடைக்கும் என்று எதிர் பார்க்கலாமா?

உதயசங்கரின் **கல்பனு** விரைவில் தமிழ்நாட்டு தியேட்டர்களுக்கு விஜயம் செய்யுமென்று தெரிகிறது. இது ஒரு ஜெமினி வெளியீடு

மங்கையற்கரசி அனேகமாகமுடிவடையும் தருவாய்க்கு வந்துவிட்டதாம். சின்னப்பா, கண்ணும்பா நடிக்கும் இப் படத்தை 'நாகூர்' கவனித்து வருவது தெரிந்த விஷயமேதான்.

பக்ஷி ராஜாவின் **பவளக் கொடி** துரிதமாகக் கிளம்ப தன்னைத்தயார் செய்துகொண்டிருக்கிருளாம். வரதன், சரோஜினி, ராஜகுமாரி, மகாலிங்கம், கிருஷ்ணன், மதுரம் நடிக்கும் இப் படத்தை வழக்கப்படி ஸ்ரீராமுலு நாயுடுதான டைரக் செய்கிருர்.

✱

சங்கர குருகுலம்

ஸ்ரீரங்கம் ஸ்ரீ சங்கர குருகுலம் கே. எஸ். வெங்கடராம சாஸ்திரி அவர்கள் எழுதுகிருர்:

ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய காசி ஸ்ரீ கரபாத்ர ஸ்வாமிகள் தை மீ 26உ (8—2—49) செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீ சங்கர குருகுலத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீ சங்கராசார்யாள் ஸ்ரீ மஹா த்ரிபுரஸுந்தரி சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபினவ நரஸிம்ஹபாரதீஸ்வாமிகள் இவர்களின் மூர்த்திகளை தர்சனம் செய்துவிட்டு திருவானைக்காவல் மார்க்கமாக திருசிராப்பள்ளிக்கு சென்றுர்கள். அங்கு நாஷனல் காலேஜில் உபந்யாஸம் செய்துவிட்டு மறுபடியும் இவ்விடம் வந்து ஸந்நிதியில் தன் பூஜையை நடத்தினுர்கள். ஸ்ரீ எல். எஸ். பார்த்தஸாரதி அய்யர், எஸ். அண்ணுதுரை அய்யர், ஏ. வி. ஸுப்ரமண்ய அய்யர், கே. எஸ். சங்கர அய்யர், என். வி. நாராயண அய்யர் முதலிய பல ஆஸ்திகர்கள் ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசிப்பதற்காக வந்திருந்தனர். எஸ். எம். சர்மாவும் ஸ்ரீ ஸ்வாமிகள் கூடவே வந்திருந்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் பூஜை முடிந்ததும் எல்லாருக்கும் தீர்த்தம் ப்ரஸாதம் கொடுத்து அனுக்ரஹித்தார்கள். ஸ்ரீ சங்ர குருகுலத்தில் மூல மூர்த்திகளையும் அஷ்டலக்ஷ்மி, குரு மூர்த்திகளையும் கோபுரத்திலுள்ள மூர்த்திகளையும் ஸ்ரீ ஸ்வாமிகள் தர்சனம் செய்து, இந்த க்ஷேத்ரத்தில் ஆசார்யாளுக்கு இப்மாதிரி ஆலயம் ஏற்பட்டது ரொம்பவும் விசேஷமென்றும் இவ்வித ஸந்நிவேசமும் ஸாந்நித்யமுமுள்ள ஸ்தலத்தை வேறு ஓரிடத்திலும் பார்த்ததில்லையென்றும் சொன்ஞர்கள். இங்கிருந்து வெளியாகின்ற ஸ்ரீ சங்கர குருகுல பத்ரிகையைப் பார்த்து மிகவும் சிலாகித்து இந்த ஸத்கார்யங்களை மேலும் அபிவிருத்திக்கு கொண்டுவர வேண்டியது ரொம்பவும் ஆவச்யகமென்று சொல்லிவிட்டு ஸ்ரீ ஸச்சிதானந்த பாரதீ பாண்டாரமென்னும் புஸ்தககோசத்தை பார்த்துவிட்டு சென்னைப் பட்டணம் புறப்பட்டுச் சென்றுர்கள்.

சரோஜினிக்கு அஞ்சலி

ரஸிக ரஞ்சனி சபையாரின் ஆதரவில் சபா மைதானத்தில் 6—3—49 ஞாயிறு மாலை 6-30 மணியிலிருந்து 8 மணி வரையில் கவியரசி சரோஜினி தேவியாருக்கு திருச்சி கலையுலகின் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெறும். விற்பன்னர்களான அறிஞர் பலர் பல பாஷைகளில் பேசுவார்கள். நகர மாந்தர் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கோரப்படுகிறது.

EMBROIDERY MACHINE

புதிதாக கண்டுபிடித்த இந்த மிஷின் துணிகள் மீது சுலபமாக நூல் பாட்டர்ன்கள், புஷ்பங்கள் ஸீனரி ஆகியவைகளை போடுகிறது. ஸ்திரீகளுக்கும் சிறுமிகளுக்கும் மிகவும் உபயோகமானது நான்கு ஊசிகளுடன் மெஷின் விலை ரூ. 3-8-0 தபால்செலவு அணு 12. கடிதங்களை ஆங்கிலத்தில் மட்டும் எழுதவும்.

DEEN BROTHERS, ALIGARH3

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனுல் டாக்டர்கள் இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறுர்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதருஸ்—4.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை:—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

சிறு கதை

சிலை சொல்லாத சேதி

டி. ஆர். குருசாமி

எதிரே ஒரு சிலை.

எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தது. அது பாதி முடித்து பாதியை விட்டு விட்ட சிற்பியை நொந்துகொண்டு தானோ என்னவோ அத்தனை கோபத்துடன் காணப்பட்டது. முறுக்கிய மீசையும் முழித்துள்ள விழிகளும், முடியிலொரு கிரீடமும், கையிலொரு கதையுமாக காலதேவனின் மாதிரியுருபோல் நின்று கொண்டிருந்தது. அதுபார்க்க பயங்கரமாக இருந்தாலும் அதில் காணப்பட்ட கலைத்திறன் அனைவரையும் அவசியம் கவரும்.

இவ்வளவு அழகுடன் அது காணப்பட்டாலும் அவ்வளவும் இடுப்பு வரையில்தான்! அதற்குக் கீழே வெறும் பாறைதான். 'காளிகோவிலின் காவல் சிலைக்காக, யாரோ ஒரு சிற்பி செய்யாமல் விட்டுப்போனது, பாவம்!' என்று என் அனுதாபத்தை என்றோ மறைந்த சிற்பிக்கு அனுப்பிவிட்டு ஒரு பெருமூச்சுவிட்டேன். "கலைக்கு அளிக்கும் காணிக்கை....அடாடா!" என்று கெக்கெலித்தது உள்மனம். "பின், காணாத கலைஞனுக்கு கண்ணீர்விட முடியுமா? அல்லது காசுதான் தரமுடியுமா?" இது வெளிமனம். கண்களை சிலையையே வட்டமிட வைத்து, சலவைக்கல்லில் சாய்ந்தேன்.

ஃ ஃ ஃ

"யாரப்பா! புதிதாக இருக்கிறது" என்று யாரோ சொல்லிச் சிரித்தார்கள். சுற்றுமுற்றும் பார்த்தேன். ஆலமரமும், அதன் விழுதும், அகண்டவானும், நானும், சிலையும்தான் இருந்தோம். மீண்டும் அதே குரல். "அன்பரே! பேசுவது நான்தான். இதோ நிற்கிறேனே உம் அனுதாபத்தைப் பெற்றுக் கொண்டு — அதே சிலைதான் பேசுகிறேன்" என்றது குரல்.

எனக்குப் பேய் பிசாசுகளில் நம்பிக்கை உண்டு. ஆனாலும் அதைப்பற்றி பயம் எழுந்ததே இல்லை ஆகவே பயப்படுபவன் நானல்ல. ஆனாலும் 'இன்று சிலை பேசுகிறது' 'கல் கதைக்கிறது' என்றால்....என்னால்நம்பக் கூடவில்லை

"பயப்படாதே! சிலையும் பேசுவதுண்டா என்று நீ சந்தேகப்படக்காரணம் உண்டு எதற்கும் மனவிசாரம் அதிகரித்துவிட்டால், அது ஜடப்பொருளானாலும், சுவற்றுடனாவது சொல்லியழ ஆரம்பித்துவிடும்" என்றது சிலை.

"சிலைக்காவது, மனமாவது. என்ன பைத்தியக்காரத்தனம் ஏதோகெட்டகனவுதான் இது!" என்றது மனம்.

"கனவானால் என்ன? நனவானால என்ன? மனிதன் மனம் கல்லினும் கடுமையானதாக மாறும்போது, கல்லுக்கும் மனம் ஏன் இருக்காது?"

"மனம் உள்ள கல். பேஷ். பேசும் சிலை. விசித்திரமாக இருக்கிறது. அதனுடன் நாம் என்ன பேசுவது? உன் கதை என்னவெனக் கேட்கலாமா?"

"என் கதை. அதை யாரிடமாகிலும் சொல்லாவிட்டால்... நான் இத்தனை நாள் இந்த நிலையில் இங்கு நின்றிருந்து என்ன பயன். உமக்குக் கேட்க முடியுமானால் நான் சொல்லுகிறேன், நீ 'சொல்லு' என்று என்னைக் கேட்காமலே" என்றது சிலை.

"ஏது? நம் மனதில் நினைப்பதைக் கூட அறிந்து சொல்லும் 'சிலை.' ஏன் ஒரு தெய்வமாகவே இருக்கக் கூடாது?" என்ன உறுதியான முடிவுக்கு வந்தது மனம். "சொல்லுகிறேன். கவனமாகக் கேளும்" என்று சிலையும் கதையையாரம்பித்தது.

ஃ ஃ ஃ

நத்தம்.

இந்த ஊருக்குத்தான் எத்தனை அழகான பெயர். நத்தி வருபவருக்கு நன்மையளிக்க முடியாவிட்டாலும்... ஆறு, அதனருகே படுகை. அழகின உறைவிடம். அமைதிக்கிருப்பிடம். இவைகளுக்கொன்றும் குறைச்சலில்லை.

என்னை சிருஷ்டி செய்தவரின் பிறப்பு, வளர்ப்பைப் பற்றி எனக்குத் தெரியாது. சிற்சில சமங்களில் அவர் சொல்லுவதிலிருந்து அவர் சுற்றம சூழலற்ற ஒரு அனாதை என்று நான றிந்தேன். சிற்சில சமயம் அவர் சிலையை அடித்துக் கொண்டே தானாகப் பேசிக் கொள்வார். "நான் நினைப்பது முடிந்துவிட்டால், இந்த உலகம் உள்ளவரை என் பெயரை ஒருவராலும் துடைத்தெறிய முடியாது. ஆஹா. என் கனவு நனவாகுமா? பாழும் உலகங் கூடி என் முயற்சியை முறியடிக்கிறது.

"எல்லோரும், எத்தனை முறைகளோ செய்தலுத்த அதே கோவில், அதே சிலை. அதே மாதிரி தோற்றம்.......... சேச்சே. ஒருவர் போன வழியே போகத்தான் இந்த அசட்டு ஆட்டுமந்தைக் கும்பலுக்குத் தெரியுமே ஒழியத் தனியாகப் புதுமையாக ஒன்றும் செய்யத் தெரியவில்லையே. அப்படித் தெரியாத ஒன்றையும் மற்றவன் நிறைவேற்றும்போது மனிதனின் வஞ்சம், போட்டி, பொறாமை ஆகியவை வந்து வழியை மறிக்கிறது. ஆகட்டும்! பார்ப்போம். எந்த உலகம் வந்தெதிர்த்தாலும் என் லட்சியத்தை நான் நிறைவேற்றியே தீருவேன்." இப்படியாகப் பேசுவார். இதைத் தொடர்ந்து அவருடைய சிந்தனையையே பிழிந்து ஒரு பெருமூச்சு விடுவார். அதன் பிறகு அவருக்கு வேலை ஓடாது. வான வெளியை வெறித்துப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்துவிடுவார்.

அவர் பெயர் யோகன் என்று அவர் நண்பர் ஒருவர் அழைப்பதிலிருந்து அறிந்துகொண்டேன். யோகன் இந்த ஊர்க்காரரல்ல. யாரோ ஒரு அரசனின் ஆஸ்தானச் சிற்பியாம் அவர்.

(அடுத்த பக்கம் பார்க்க)

1839ம் வருடத்திலிருந்து இன்னமும்
முதல்தரமாக பிரக்யாதி பெற்று விளங்குகிறது!

உலக பிரசித்திபெற்ற
அசல்
ஷண்முகம் பட்டணம் பொடி
உலக மார்க்கை கவனித்து வாங்கவும்
எங்கும் கிடைக்கும்

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி
தபால் பெட்டி 140. மதராஸ்.

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57

Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனாதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம்,
அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல்
வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

சிலை சொல்லாத சேதி

(முன் பக்கத் தொடர்ச்சி).

அந்த அரசர் ஒரு பெரிய கோவில் கட்டிக்கொண்டிருந்தாராம். அதற்கு யோகன்தான் பிரதானச் சிற்பியாம். அந்தக் கோவில் கட்டி முடிவதற்குள் இவருக்கும் அந்த அரசனுக்கும் சற்று மனவருத்தம் ஏற்பட்டு விட்டதாம், ஒரு சிலையின் காரணமாக.

அனறே அங்கிருந்து புறப்பட்டு என்னையும் உடன் எடுத்துக்கொண்டு இந்த ஊர் வந்து சேர்ந்தார். இதையெல்லாம் அவர் நண்பரிடம் சொல்லிக்கொண்டிருக்கையில் நான் கேட்டது.

இந்த ஊரில் வந்தும் அவருடைய கஷ்டம் நீங்கவில்லை. நாள் பூராவிலும் அதோ அந்தக் குட்டிச் சுவர், கிழக்கே, தெரிகிறதே அதனருகில் வைத்திருந்த அவருடைய அரண்மனையின்,குடிசையின் வாசலில் அமர்ந்து சிலையை அடித்துக்கொண்டிருப்பார். "கல், கல், கல்," என்று எழும்பும் அந்த வெண்கல நாதம். எனக்கு இன்று கேட்டாலும் செவியில் படுகிறது.

ஹூம். சிலையடித்த நேரம் போக மற்ற நேரங்களில், நீர் அமர்ந்திருக்கும் அந்தப் பளிங்கு மேடையிலேயே உட்கார்ந்திருப்பார் வானத்தைப் பார்த்துக்கொண்டே. அடிக்கடி என்னைத் திரும்பிப் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்ததை நான் கவனித்திருக்கிறேன். அதில கலந்திருந்த ஏக்கம், தாபம், சோகம்.... அப்பப்பா.... தாங்க முடியாது. ஆனாலும் அந்தப் பெருமூச்சு விடுவதின் அடிப்படைக் காரணத்தை நானறிய மாட்டேன்.

ஒவ்வொரு நாள் ஊருக்குள் போவார். நீண்ட நேரம்வரை வரமாட்டார். பிறகு வருவார், யாரையோ வைதுகொண்டே. எனக்கு இவைகளெல்லாம் புரியவில்லை. இன்று நான் பேசும் சக்தி படைத்திருப்பதைப் போல அன்று படைத்திருந்தால் "என்" என்று கேட்டுக் காரணமாவது தெரிந்துகொண்டிருப்பேன். ஹூம், என்னசெய்வது?

சில சமயம்யோகனின் நண்பர் வருவார். "யோகா! உனக்கேனடா இந்தப் பைத்தியம்? 'ஊருடன் ஒத்துவாழ்' என்று பெரியோர்கள் சொல்லுவதை நீயறிந்தவன்தானே? ஊரில் பெரும்பாலோர், அதிலும் உன்னைவிட மூத்தவர்கள் சொல்லும்போது நீ கேட்டால் என்ன? நம் நாட்டில் இல்லாத வழக்கத்தை இன்று நீ புகுத்துவது என்பது எப்படி முடியும்" என்பார்.

"இல்லை நாராணு. பழமை, பழக்கம் என்று சொல்லிக்கொண்டு எறும்புபோல எல்லோரும் ஒரே பாதையில் ஓடிக்கொண்டிருந்தால் புதுமையை எப்படிப் புகுத்த முடியும்? புதுமை காணுத வாழ்வு என்ன வாழ்வு? எனக்கு அது பிடிக்கவில்லை. எப்படியாவது என் எண்ணத்தை ஒரு சிறிய அளவிலாவது நிறைவேற்றி வைப்பேன். என் கையிலுள்ள வலிவும், வளைந்து குடையும் இந்த உளியும், சுத்தியலுமே எனக்குப் போதும். இதைக்கொண்டே இந்த உலகத்தை என்பால் திருப்புவேன். இந்த அமலனுகட்டும் இன்னம் எத்தனைபேர் வந்தாலும் கவலையில்லை" என்பார்.

அவர் குரலில் ஒரு உறுதியிருக்கும். நினைத்ததை சாதித்துவிடவேண்டும் என்ற துடிப்பும், துள்ளலும் அவருடைய குரலில் தொனிக்கும். இன்னம் என்னவெல்லாமோ சொல்லுவார். அவைகளிலிருந்தெல்லாம் நான் அறிந்தது கொஞ்சந்தான். ஆனாலும் அவரது கற்பனை என்ன? எதைச் செய்ய அவர் யோசிக்கிருர். அந்தப் பெருமூச்சின் காரணம்? இவைகளை நானறிந்தேனில்லை. இன்று கூட நான் யோசித்துப் பார்க்கிறேன். எனக்குப் புரியவில்லை.

அவரைப்பற்றி நான் கேள்விப்பட்டது இதுதான். ஏதோ ஒன்றை யோகன் செய்வதில் பிடிவாதமாகத்தான் இருந்தாராம். அதன் காரணமாகத்தான் அரசனும் இவரை விரட்டி அடித்துவிட்டாராம். அதையே இந்த ஊரில் நிறைவேற்றிவிட முயன்ருராம். அதற்கு இந்த ஊரில் உள்ளோர் எதிர்த்தார்களாம். அப்படி எதிர்த்தவர்களுள் முதன்மையானவர் அமலன் என்ற மற்ருெரு சிற்பியாம்.

கலையறியா மக்கள் சூழ்ந்த இந்த ஊரின் கலைஞனுக அவனிருந்தான். கல்லடிப்பான். அதில் கலையின் நெளிவிருக்காது. சிலை செய்வான், சிற்பசாஸ்திரம் அதை ஏற்காத சிலையென்று. கடவுளைச் சமைப்பான். அது காணுத—மனிதன் கண்டேயிராத ஒன்றின பிம்பம்தானே. எப்படி எந்த உருவில் இருந்தாலும் கடவுள்தானே பிடித்து வைத்த பிள்ளையாரைவிட சற்று உருவுடன் இருந்தால்போதாதா? இது அவனுடைய சமாதானச் சொல்

கலையையே உளியாக்கி, கற்பனைச்சுத்தியலால் அடித்துக் கல்லுக்கு உயிரளித்து கால காலத்தையும் கடந்துநின்று காசினியின் கவனத்தைத் தன் பாலிழுக்கும் அமரச் சிற்பத்தை, அதைச் செய்த கலைஞனை,கண்டு அறிவிலி அமலன் மிரண்டதில் ஆச்சரியமில்லைதான்.

"எப்படியாவது, யோகனை ஊரைவிட்டு விரட்டிவிடவேண்டும். அல்லது......ஒழித்துவிட வேண்டும்" என அமலன் திட்டமிட்டான். நீர் நினைக்கலாம், கலைஞன் கொலைஞனுக இருப்பானு, இருக்கமுடியுமா, என்று. கலைஞனின் மிருதுவான தளிர் உள்ளம், கொலைபோன்றகடினத் தொழிலை கனவிலும் கருதியிருக்குமா? இது நியாயமான கேள்விதான். எத்தனை மிருதுவான உள்ளமானுலும் வஞ்சம், போட்டி, பொருமை முதலியவைகளால் சூழப்பட்டால் கல்லிலும் கடினமாக மாறிவிடுவது என்பது இயற்கையின் நியதிதானே? இதைவிட்டு எந்தக்கலைஞனும் மாறிப்போகமுடியுமா? ஆகவே இயற்கையின் நியதிப்படி அமலன் அரக்கனுக அவதாரமெடுத்ததில் ஆச்சரியமிருக்கக் காரணம் இல்லை.

"ஹூம்"....சிலை பேசுவதை நிறுத்திவிட்டது.

சற்றுநேரம் மௌனம். அதோடு கதை நின்றுவிட்டதோ என நான் பயப்பட்டேன். சற்று நேரத்திற்கெல்லாம் மீண்டும் தொடர்ந்தது.

(தொடரும்)

*

துறையூர் பள்ளி

சென்ற மீ 18-ந் தேதியன்று துறையூர் ஜமீந்தார் உயர் நிலைப் பள்ளியின் இவ்வாண்டு உடற்றிறப் போட்டிப் பந்தய விழா திருச்சி பிஷப்ஹீபர் பள்ளித் தலைமையாசிரியர் திரு. ஆல்பர்ட் தலைமையிலும், 20-ந் தேதியன்று பள்ளி, அதன் இலக்கியக் கழகம் இவற்றின் எட்டாவது ஆண்டுவிழா வழக்கறிஞர் திரு. எம். கையிலை அனந்தர் தலைமையிலும் இனிது நடந்தேறின.

*

சலவைக்கு சிறந்த சோப்

J. 101

பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்

வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன

ஒவ்வொரு வீட்டிலும் தின கால உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.

J. 101-பார் சோப்புகள்

வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்.

ஜோதி சோப் ஒர்க்ஸ்
கரூர்.

J. 101 மார்க் பார்த்து வாங்கவும்.

டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு பிரசித்திபெற்ற டானிக்

ருதுகத்தை நிறுத்தியது.

குமரி (Tablets) ருதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது, ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரு. 3 நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரு. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரு. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரு. 4

(வி. பி. க்கு 12 அணு அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, China Bazaar Rd. MADRAS

எங்கும் சிறந்து விளங்குவது
L G
ரிஜிஸ்டர் இஞ்சின் டிரேட் மார்க்
பெருங்காயம்
L. G. & CO., KUMBAKONAM - Head Office: BOMBAY.
லால்ஜீ கோது & கோ,
— கும்பகோணம் —

Regd. No. M 3398 SHIVAJI 6—3—49 Estd. 1935

நவீன மின்சார கடிகாரம்



மேலே படத்திலுள்ள கடிகாரம் சாதாரணமானதென்று நினைத்து விடாதீர்கள். மின்சாரத்தால் இயங்கும் இக்கடிகாரத்திற்கு நமக்குள்ளதைப் போலவே 'மூளை'யும் இருக்கிறது. ஆகவேதான் இது, 'மூளையுள்ள கடிகாரம்' என அழைக்கப்படுகிறது "ரேடியோ பிரிஸெட் கடிகாரம்' என்ற வர்த்தக பெயரில் விற்பனை செய்யப்படும் இக்கடிகாரத்தை லண்டனிலுள்ள "ஸ்மித் இங்கிலீஷ் கடிகாரங்கள் லிமிடெட்" என்ற தொழில்ஸ்தாபனம் தான் தயாரித்து வருகிறது. இக்கடிகாரமும் இன்னம் பலவித நூதன கடிகாரங்களும் வரும் மே மாதம் லண்டனில் நடைபெற விருக்கும் கைத்தொழில் சந்தையின் ஆபரணங்கள், கடிகாரங்கள், வெள்ளிப்பாத்திரங்கள் பிரிவில் இடம்பெறப் போகின்றன.

நம்முடைய ஞாபகமறதிகளையும் இதர அசௌகரியங்களையும் நீக்குவதற்கும், வீடுகளில் அனாவசியமாக மின்சாரம் வீணாவதைத் தடுப்பதற்குமான பற்பல வேலைகளைச் செய்யக்கூடியபடி ரேடியோ பிரிசெட் கடிகாரம் தயாரிக்கப்படுகிறது நாம் படுக்கைக்குச் செல்லுமுன் மின்சார போர்வைக்குச் சூடேற்றி தயாராக வைத்திருக்கிறது. இரவு எட்டுமணிக்கு ரேடியோவில் நல்ல சங்கீதக் கச்சேரி இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதை நாம் மறந்து விட்டாலும் இக்கடிகாரம் மறந்து விடாது. சரியான நேரத்திற்கு நாம் கேட்க நினைத்த ஸ்டேஷனுக்கு இக்கடிகாரம் 'ட்யூன்' செய்து வைக்கிறது இரவு நேரங்களில் நாம் படுக்கைக்குச்சென்றபின் ஹால், வராந்தா விளக்குகளை இக்கடிகாரமே அணைத்து விடுகிறது. படுக்கையில் படுத்துக்கொண்டு படித்துக்கொண்டிருக்கும்போது படுக்கை அறை விளக்கை அணைக்க மறந்து போய் தூங்கிவிட்டால் அதுபோது இக்கடிகாரம் நமக்காக அதை அணைத்து விடுகிறது. இவைகளைத்தவிர மின்சார செலவுகளை சிக்கனமாக்கக் கூடிய இன்னம் எவ்வளவோ வேலைகளை இக்கடிகாரம் செய்கிறது. சந்தையில் காட்டப்படவிருக்கும் மற்றொரு அலாரம் கடிகாரம் நாம் மறந்து போனாலும் பிரதிதினமும் நமக்குத் தேவைப்படும் மணிக்கு 'அலாரத்தை' சரியாக வைத்து விடுகிறது.

யுத்தம்முடிவடைந்த பின் கடிகாரங்கள் தயாரிக்கும் தொழிலில் பிரிட்டன் அதிகம் முன்னேறியிருப்பதால் இவ்வருட கைத்தொழில் சந்தையின் கடிகாரப்பிரிவு மிகப்பெரியதாகவே இருக்கும். சகலரும் வாங்கக்கூடிய விலைகளுக்கு தற்போது பிரிட்டன் கடிகாரங்கள், ரிஸ்ட் வாச்சுகள் தயாரித்து வருகிறதென்பதை வெளிநாட்டு வர்த்தகர்கள் சந்தையில் பார்க்க முடியும்.

லண்டனில் "வேலைக்காரி!"

பாதரட்சை, பூட்ஸ்களை சுத்தம் செய்து பாலிஷ் செய்யக்கூடியதும், சமையல் பாத்திரங்களை நன்றாகக்கழுவி துடைத்து வைக்கக்கூடியதும், வீடுகளை சுத்தமாக பெருக்கக்கூடியதும், கத்தியை ஒரு சில வினாடிகளில் சாணைபிடிக்கக் கூடியதுமானதொரு இயந்திர "வேலைக்காரி" சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற ஒரு பொருட்காட்சியில் காட்டப்பட்டது. இதை விஞ்ஞான கருவி தயாரிப்பவரொருவர் தான் கண்டுபிடித்துள்ளார் இந்த இயந்திரத்தைக் கண்டுபிடிப்பதற்கு இவருக்கு இரண்டு வருடங்கள் பிடித்தன. தன்னுடைய தார்ன்டன் ஹீத் தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான இயந்திர வேலைக்காரிகளைத் தயாரிக்க அவர் திட்டமிட்டு வருகிறார்.

பாட்லெயின் வாசகசாலை

பிரிட்டனில் ஆக்ஸ்போர்டிலுள்ள பாட்லெயன் புத்தகசாலையின் விஸ்தரிப்புக்கான 10 லக்ஷம் பவுன் திட்டமொன்றை 1947 வருடம் ஆறும் ஜார்ஜ் மன்னர் ஆரம்பித்து வைத்தபோது உலகிலேயே மிகப்பழமையானதும் பிரபலமானதுமான இந்நூல் நிலையத்தின் சரித்திரத்தில் புதிய 'சகாப்தம்' ஆரம்பமாயிற்று. இந்த பாட்லேயன் நூல் நிலையம் கடந்த மூன்று நூற்றாண்கடுளாக உலக முழுவதிலும் புகழ் பெற்றுள்ளது. இன்று இந்நூல் நிலையத்தில் 20 லக்ஷம் புத்தகங்களும், 50000 கையெழுத்துப் பிரதிகளும் கணக்கிலடங்காத சாஸனங்களும் உள்ளன. ஆக்ஸ்போர்ட் சர்வ கலாசாலையில் படிக்கும் மாணவர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்து வரும் நிபுணர்களுக்கும் பாட்லேயன் நூல்நிலையம் ஒரு 'தொழிற்சாலை'யாக விளங்கி வருகிறது.

இந்நூல் நிலையம் யாருடைய பெயரைத் தாங்கி நிற்கின்றதோ அவரைவிட மிகப்பழமையானதாகும். ஸர்தாமஸ் பாட்லே பிறப்பதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாகவே கிளஸ்டர் கோமகனான ஹம்ப்ரி என்பார் 1440-ம் வருடம் ஆக்ஸ் போர்டில் ஒரு நூல் நிலையத்தை ஸ்தாபித்தார்.

1598 வருடம் அரசாங்க சேவையிலிருந்து பாட்லே அவர்கள் விலகியபின் ஆக்ஸ்போர்டிலிருந்த இப்புத்தகசாலைக்கு வருடா வருடம் மான்யம் கொடுத்து வந்தார். பணக்கார விதவை யொருவரை மணந்திருந்த பாட்லே அவர்கள் இறக்கும்பொழுது தன்னுடைய சகல சொத்துக்களையும் புத்தகங்களையும் இந்நூல் நிலையத்திற்கே எழுதிவைத்தார். பாட்லே அவர்களின் மரணத்திற்குப்பின் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தால் ஆக்ஸ்போர்ட் சர்வ கலாசாலையே சிதறுண்டு கிடந்தது. கில்பர்ட் ஷெல்டன் என்பவர்தான் இந்நூல் நிலையத்தை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவந்தார். கிராம்வெல்லும் இந்நூல் நிலையத்திற்கு அநேக கையெழுத்துப் பிரதிகளைக் கொடுத்துதவியுள்ளார்.

பாட்லே நூல்நிலையத்திலுள்ள புத்தகங்கள், கையெழுத்துப் பிரதிகள் முதலியவைகள் எவ்வளவு பெறுமென்பதை மதிப்பிட இது வரை எவரும் முயற்சி செய்ததில்லை.

Printed at Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor).